REGISTERED No. M. 6165. அணா 2

16

16. 4-55

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 SEP 1956
MADRAS

அக்டோபர் 1955.

| விஷயம். | பக்கம். |
|---|---|
| இறைவனுக்கோர் இணைவேண்டாம் ... ... ... | 1 |
| இரத்தச் சின்னம் (தொடர்கதை) ... ... ... | 7 |
| புனித நபிகள் பிறந்த நாளைப் போற்றுவீர் (வேளாங்கண்ணி-கவிஞர் சாந்திதாசன்) ... | 14 |
| மறுமணம் (வழுவை வேந்தன்) ... ... ... | 15 |
| யானையை வென்ற வேந்தன் (டி. எப். ஆர். ம.ஆலி ஸாஹிப் பாகவி) ... | 17 |
| உத்தம நபியின் உதயதினம் ... ... ... | 19 |
| ...ன்ஸ்டன் சர்ச்சில்" (முஹம்மது தாவூது) | 21 |
| ...ஆன் சாரசங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) ... | 29 |
| ...யிர் ஆவி நீத்தனையோ ... ... | 32 |

... இஸ்லாம் ஆபீஸ் :
...ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

SL
ஜ211, N129 F1
N55
187047

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–8–0 |
| தனிப் பிரதி | அணா. | 0–2–0 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–0–0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.


[ஹதீதுகள்]

## நபி நாயகத்தின் திரு வாக்கியம்.

(மிஷ்காத்தே ஷரீபின் மொழி பெயர்ப்பு)

(முதற் பாகம்)

இதில் நமது நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகள் அடங்கி இருக்கின்றன. முதற்பாகம் 930 ஹதீதுகள் அமைந்தது. டிம்மி 1-8 ஸைஸில் 288 பக்கங்கள் கொண்டது. கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு

விலை ரூ. 2—4—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# 'பத்ஹுல் இஸ்லாம்'

அக்டோபர்—1955.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 SEP 1955
MADRAS

## இறைவனுக்கோர் இணைவேண்டாம்

'சர்வலோக சராசரங்களையும் சிருஷ்டித்த ஏக பரம்பொருளான தனிக் கடவுளாகிய எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா ஒருவனேயாம்' என்பது உலக முஸ்லிம்கள் எல்லோரின் ஏகோபித்த ஈமான் என்னும் அடிப்படைக் கொள்கையாம்.

இந்தத் தனிச் சிறப்புடைய கோட்பாட்டின் தத்துவார்த்தம் யாதென்பதை நன்காராய்ந்தோரின் ஈமான் என்னும் பக்திக்குன்றம் ஒருபோதும் அசைவுற மாட்டாது. கட்டிடத்துக்கு அஸ்திபாரமே உறுதியாக இருக்க வேண்டுமென்ற நியதியின் பிரகாரம், இஸ்லாமிய அனுஷ்டானங்களுக் கெல்லாம், ஏக தெய்வ நம்பிக்கை யெனும் ஈமான் மிக மிக உறுதியாக இருத்தல் வேண்டுவது அத்தியாவசியமாகும்.

"வலா துஷ்ரிக் பில்லாஹி ஷய்அன்" என்பதற்கு "நீங்கள் ஏக தெய்வமாகிய அல்லாஹ்வைத் தியாகிக்குங்கால், வேறேதொன்றையும் அத்துடன் இணையாக்கிக் கொள்ளாதீர்" என்பது விழுமியப் பொருளாகும்.

"இறைவன் ஒருவனே; அவனுக்கு இணை துணை யாருமில்லை" என்று ஒவ்வொரு முஸ்லிமும் கலிமா ஓதி, இந்த தத்துவத்தை இயற்கையாகவே தம் மனதில் இறுத்திக்கொள்கின்றனர்.

"ஈமான் ஒரு கூர்மையான வாளாயுதத்துக்கு ஒப்பாகும்" என்று ஓர் அறிஞர் கூறும் உதாரணத்தை யாரும் நம்பியேயாக வேண்டும். வாளாயுதத்தைச் சொருகி வைப்பதற்கு ஓர் உறை வேண்டும்; அந்த உறையினுள் ஒரே வாளாயுதத்தைத்தான் சொருகி வைக்க முடியும். இதுதான் அன்று தொட்டு இன்று வரை போர் வீரர்கள் கையாண்டு வரும் முறை. ஓர் உறைக்குள் இரண்டு வாளாயுதத்தை சொருகி வைக்கும் முறை உலகில் எங்குமே கிடையாது. அப்படி பலவந்தமாக சொருகி வைத்தால் என்ன ஆகும்? வாளின் கூர்மையும் பளபளப்பும் கெட்டுப்போகும். ஒன்றோடு ஒன்று உரோய்ந்து கத்தியின் உருவே பங்கப்பட்டுப் போகும். இது சாதாரணமான உதாரணம்.

ஏக இறைவனுக்கு இணை வைக்கக் கூடாதென்பதற்கு இன்னொரு உதாரணமும் சில அறிஞர்கள் கூறுகின்றனர். நாட்டையாளும் மன்னன் நாட்டுக்கு ஒருவனேதான் இருக்க வேண்டும் என்பது தொன்று தொட்டுள்ள ஓர் வழக்கமாகும். ஆம்! ஒரு நாட்டை இரண்டு ராஜாக்கள் ஆளுவதென்பது சிரமசாத்தியமான காரியமாகும். ஒரு தேசத்தில் ஒரேவிதமான சட்ட திட்டமும் ஆட்சி முறையும் நியதிக்கட்டுப்பாடும் ஏக ரீதியில்தான் இருக்கவேண்டும். இதற்கு ஒரே ஒரு இராஜாதான் தனிச் சக்கிராதிபதியாய் இருந்திலங்கவேண்டும். ஒரு ராஜ்யத்துக்கு ஒரே சிம்மாசனம்; ஒரே செங்கோல்; ஒரே ஆட்சி முறைதான் ஒழுங்கையும் அமைதியையும் சுபிக்ஷத்தையும் நிலைநிறுத்த முடியும். ஒரு நாட்டை இரண்டு ராஜாக்கள் ஏக சமயத்தில் அரியணையில் இருந்து ஆட்சிபுரிந்து வந்தனர் என்று எந்த சரித்திரமும் கூறக்காணோம். அப்படி, ஒரே சிம்மாசனத்தில் இரண்டு அரசர்கள் உட்கார்ந்து ஆட்சி பாரம் நடத்தினால் அந்த தேசம் இரண்டாங்கெட்டான் கதியடைந்து, அமைதிகுலைந்து நாசமாக வேண்டியதுதான்.

இந்த உதாரணத்தையும் நம் முஸ்லிம்கள், ஏக தெய்வனாகிய அல்லாஹ்வின் இகபர ஆட்சிமுறைக்கு ஒப்பிட்டுப் பார்த்தல் சாலும். ஆம்! இப்பிரபஞ்சத்தின் சிருஷ்டி முறையெல்லாம் ஒரே ரீதியில்தான் இருக்கிறது. வானத்தில் சூரிய, சந்திர, நட்சத்திர கிரஹணங்கள் கிரமமும் தருமமும் ரீதியும் தவறாமல் இரவும் பகலும் திதிகளில் இயங்கிவருகின்றன. அந்த ஒரே எஜமானின் செங்கோலெனும்

18704

'உலூஹிய்யத்' நடைபெற்று வருவதால், சூரிய சந்திர நட்சத்திர இயங்குதல்களில் குழப்பம் ஏற்படுவதில்லை.

"இன்னல்லாஹ அலா குல்லி ஷய்யின் கதீர்" (சகல சிருஷ்டிப் பொருட்கள் மீதும் ஏக தெய்வ அல்லாஹு தஆலா சர்வாதிக்க சக்தியுடையவனாக இருக்கின்றான்.) எனவே, அவ்வல்லாஹ்வின் ஆக்ஞையையும் நியதியையும் மீறி நடப்பதற்கு எந்த சிருஷ்டிப் பொருளுக்கும் தனிப்பட்ட சக்தி கிடையவே கிடையாது. கடல் கொந்தளித்து அலை மோதாமல் இருந்துவிட முடியாது. மலை தன் இருப்பிடத்தில் நிலைத்திருப்பதைவிட்டு அசைந்தாடிக் கொண்டிருப்பதென்று சுயமே அதனால் முடியவே முடியாது. சூரியன் எப்போது வெப்பத்தை வீசி உலகத்துக் கோடிகட்கெல்லாம் உஷ்ணத்தை அளிக்கவேண்டுமென்றும், எப்போது அது தன் தஹிக்கும் காந்தியை குறைத்துக் கொண்டு மழைக்கும் குளிர்காற்றுக்கும் பனிக்கும் இடம்தர வேண்டுமென்றும் இயற்கையின் பெயரால் விதிமுறை ஏற்படுத்தப்பட்டுபோய் விட்டன. இதேமாதிரிதான் மழை எப்போது பொழிய வேண்டும், பனி எப்போது பெய்ய வேண்டும் என்பனவும் ஏகனால் விதிமுறை ஏற்படுத்தப்பட்டுப்போய் விட்டது.

இதே மாதிரிதான் ஜீவஜந்துக்களான உயிரினங்கள் எப்படிப் பெருக வேண்டும், எப்படி இனம் குறைய வேண்டும் என்பதற்கு ஒழுங்கு முறை ஏற்படுத்தப்பட்டு விட்டன. ஜனனத்துக்கும் மரணத்துக்கும் காரணகாரியங்கள் நிகழ்வுற வேண்டுமென்று அந்த சர்வேசுவரனால் வரம்புமுறை ஏற்படுத்தப்பட்டு விட்டது. ஒரு ஆண் ஜந்துவும் பெண் பேடும் கூடி உறைந்தால் அதிலிருந்து மூன்றாவதான ஓர் உயிரினம் தோன்ற வேண்டுமென்று அந்த ஏக இறைவன் விதி ஏற்படுத்தி விட்டான். அதற்குமாறாக இரண்டு பெண் இனங்கள் சேர்ந்துப் புதிதாக ஒரு சிசுவை உற்பத்தி செய்து கொள்ள முடியாது. அங்ஙனமேதான் இரண்டு ஆண்கள் சேர்ந்து கொண்டு ஒரு புதுக்குட்டியை உலகத்தில் ஜனிக்கச் செய்துவிட முடியாது. இவ்வாறே உலகில் ஒவ்வொரு இயற்கைக் காரியமும் இறைவனருளால் ஒழுங்காக நடைபெற்று வருவதைக் காண்கின்றோம்.

ஏக தெய்வத்தின் ஆட்சிமுறை யெனப்படும் 'உலூஹிய்யத்' ஒழுங்காக நடைபெற்று வருவதைக் கொண்டே, இறைவனின் ஏகாதிபத்தியம் ஒன்றே என்பது தெள்ளத் தெளிய விளக்கமாகிறது.

"குல் ஹுவல்லாஹு அஹத்" (இறைவனாகிய அல்லாஹ் ஒரே ஒருவன்தான் என்று திண்ணமாய் கூறுவீராக) என்பது ஆராயத் தக்க விழுமிய கருத்தாகும். சர்வேசுவரனாகிய இறைவன் ஒருவனே தான். அவனுக்கு யாரும் துணையோ, கூட்டோ, பக்கபலமோ, உதவியோ, உபகாரியோ தேவையில்லை. எவருடைய கூட்டுறவும் இணை துணையுமில்லாமல் பரம சக்தியாளனாயும் பரம்பொருளாயும் விளங்குபவனே அல்லாஹ் ஆவன்.

'அல்லாஹ்' என்ற பதம் தனிச் சிறப்புடையது. அதற்குள் தெய்வாம்சம் அனைத்தும் பொருந்தி யிருக்கிறது. சர்வ குணங்களும் அதினுள் அமைந்திருக்கிறது. சகல விதமான செயல் முறையை வெளிப்படுத்தும் கருத்துத் தத்துவமும் அதனுள் அடங்கி யிருக்கின்றது. எனவே, படைப்பதற்கு ஒரு தெய்வம், அவைகட்கு படியளந்துப் பாதுகாப்பதற்கு ஒரு தெய்வம், அவைகளை அழிப்பதற்கு ஒரு தெய்வம் என்பது போன்ற விளையாட்டுத் தனமான தத்துவங்களை, சத்திய இஸ்லாம் மதம் எம் இறைவனுக்கு கற்பனை செய்ய வில்லை. இவ்வாறே, பரமண்டலத்தில் ஒரு பிதாவும், பூமி லோகத்தில் ஒரு குமாரனும, இடையில் ஓர் பரிசுத்த ஆத்மாவும் இருந்து பாபிகளை ரக்ஷிக்கிறார்கள் என்ற திரியேகத்துவக் கொள்கையை எந்தப் பகுத்தறிவுள்ள முஸ்லிமும் நம்புவதற்குத் தயாராயில்லை.

பல்லாயிரம் தெய்வங்கள் கூடி இப்பிரபஞ்சத்தைப் பராமரிக்கின்றனர் என்பவர்கள், அதில் தங்கள் பகுத்தறிவென்னும் சிந்தனைக் குதிரையை ஓடவிட்டுப் பார்க்க மாட்டார்கள். பிதா என்றும், புத்திரன் என்றும், பரிசுத்த ஆத்மா என்றும் மூன்று தெய்வங்களைக் கொண்டு ஒரே முடிச்சு போடும் பேர்வழிகளும் தங்கள் பகுத்தறிவென்னும் உரைகல் கொண்டு, அந்தக் கோட்பாடெனும் நாணயம் தங்கமா, பித்தளையா யென்று உரைத்துப் பார்க்க மாட்டார்கள். ஆம்! அவர்களின் மத விஷயங்களுக்கும் பகுத்தறிவுக்கும் சம்பந்தம் இருந்தால் தானே! தங்கள் மாதா பிதாக்களும் பெரியோரும் குருமாரும் எதைக் கூறி வந்தார்களோ, அதை அப்படியே நம்பி நடந்து கொள்வதையே அவர்களுடைய மதம் என்னும் தர்மங்கள் வற்புறுத்திப் போதிக்கின்றன.

ஆனால், இஸ்லாம் மதத்தில் பகுத்தறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் நிறைய சம்பந்தம் உண்டு. மததர்மம் சம்பந்தமான விஷயங்களைகூட

பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்க்க இஸ்லாம் மதம் பரிபூரண அனுமதியளித்திருக்கிறது. ஒரே நாயனை இறைவனை, அல்லாஹ்வை ஏகனாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஹஜ்றத்துமார்கள் கூறினால், நவீனபடிப்பும் அறிவாராய்ச்சியு முடைய அறிவாளி இளைஞர்கள், அதை அப்படியே கண்மூடித் தனமாக ஒப்புக் கொண்டு விடுவதில்லை. 'ஏன் ஒரே தெய்வம் இருக்க வேண்டும்; இரண்டு தெய்வம் இருந்தால் என்ன?' ஆராய்ந்து பார்க்கின்றனர் இக்காலத்து வாலிபக் குழாத்தினர். உடனே அவர்களுக்கு விஷயம் புலப்பட்டு விடுகிறது. ஒரு நாட்டில் இரண்டு சக்ரவர்த்திகள் இருந்து ஆட்சி நடத்தினால், அடித்துக் கொண்டு போரிட்டுச் சாவார்களே அல்லாது அகில சராசர ஏகாதிபத்திய ஆட்சி பாரம் நடத்த முடியாதென்பதை தெரிந்து கொண்டு, "அல்லாஹு அஹதுன்" (இறைவன் ஒரே ஒருவன்தான்) என்ற இஸ்லாமிய விழுமிய தவ்ஹீதுக் கொள்கையை ஒப்புக் கொண்டு தீருகின்றனர்.

இவ்வாறேதான் பரிசுத்த சன்மார்க்கமாகிய இஸ்லாத்தின் ஒவ்வொரு கொள்கையும் கோட்பாடும் பகுத்தறிவாளரால்கூட ஒப்ப முடிந்த ரீதியில் இயற்கையாகவே அமைந்துள்ளன. ஆதலின், முஸ்லிம்களாகப் பிறந்த எவரும், ஏக தெய்வக் கொள்கையை நம்பித்தான் கலிமா ஓதி ஈமான் கொண்டு நல் அமல் செய்து நலம் பெறுகிறார்கள்.

எனினும் ஒரு விஷயத்தில் நம் பாமர முஸ்லிம்களில் பெரும்பாலோர் வழிதவறிப் போய் விடுகிறார்கள். அறிந்தோ அறியாமலோ, உணர்ந்தோ உணராமலோ, நம் பாமரர்கள் புரியும் தகாத செயலை 'ஷிர்க்'—'இணை வைத்தல்' என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். நாம் ஓதும் கலிமாவில்கூட "லா ஷரீக்க லஹு" (அவனுக்கு யாரும் எவ்வித இணையில்லை) என்று நாம் அறுதியிட்டு உறுதி கூறுகின்றோம்.

இங்ஙனம் இருந்தும் பாமர மக்களில் ஒரு சிலர், அல்லாஹு தஆலா அல்லாத சிருஷ்டிகளிடம் போய், தங்களுக்கு உதவியும் சகாயமும் மன்றாட்டமும் வேண்டு மென்று வேண்டிக் கொள்கின்றனர்.

ஆம்! நாம் தினமும் ஐந்துவேளை தொழுதுக் கொள்கிறோம். ஒவ்வொரு வேளைத் தொழுகையிலும் பல ரக்கஅத்துகள் தொழுகி

ரேம். ஒவ்வொரு ரக்கஅத்திலும் ஒரு முறை 'அல்ஹம்து' என்னும் ஸூரத்துல் பாத்திஹாவை ஓதிப் பாராயணம் செய்கின்றேம். அந்த அல்ஹம்தில் ஏழு ஆயத்துகள் உண்டு. அந்த ஏழு வாக்கியங்களில் ஒரு பகுதியில் இறைவனின் புகழ், தோத்திரம், மகிமை, மகாத்மியம் உண்டு; மற்றொரு பகுதியில், அந்த இறைவனை வணங்கும் விதம் விளக்கப்படுகிறது.

'இய்யாக்க நஃபுது வஇய்யாக நஸ்தயீன்' என்ற திருவாக்கியம் குறிப்பிடத்தக்கதாகும். "அன்பும் அருளும் உடைய இறைவனே, நாங்கள் உன்னை மட்டுமே தொழுது வணங்குகிறேம்; யாவற்றுக்கும் உன்னிடமே உதவி சகாயம் வேண்டுகின்றேம்" என்று ஓதிப் பிரார்த்தனை செய்கின்றேம்.

"உன்னையே வணங்கி, உன்னிடமே உதவி வேண்டுகிறேம்" என்று சொல்லி அல்லாஹு தஆலாவுடைய தர்பாரில் பிரதிக்ஞை செய்துவிட்டு வெளிவரும் முஸ்லிம்கள், அந்த சர்வ சக்தியாளனை அல்லாஹு தஆலாவை கைவிட்டு, வேறு பொருட்களிடமும் மனிதர்களிடமும் போய், அதே மாதிரி உதவியும் சகாயமும் வேண்டிக் கொண்டு, மண்டிக்கிறார்களே சிலர்—இவர்களின் இந்தச் செயலைத் தான் பெரியோர்கள், "ஷிர்க்—பித்அத்" என்று சொல்லுகிறார்கள்.

இது அகீதா சம்பந்தப்பட்ட விஷயமாகும். முஸ்லிம்கள் இவ் விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். தர்க்க வாதமோ, பிடிவாதமோ புரியக்கூடாது. தினமும் ஐந்து நேரமும் தொழுதுக்கொள்ளும் முஸ்லிம்கள், அல்லாஹு தஆலாவை விட்டு வேறு யாரிடமும் எதனிடமும் உதவி கேட்பதில்லை. தொழுதுக்கொள்ளாத ஒரு சில முஸ்லிம் பாமர மக்கள்தான், ஏதோதோ முறைகளில் தங்கள் வழிப்பாட்டை ஏற்படுத்திக் கொள்கின்றனர். ஆதலின் முஸ்லிம் சோதரீர்! ஒரே ஆண்டவன்தான் உண்டு என்று ஈமான் கொண்டுள்ள நாம், இறைவனுக்கு இணைவைப்பது போன்ற காரியங்களில் ஈடுபடுவது நேர்மைதானு என்பதை சற்றே சிந்திப்பீர்களாக. வஸ்ஸலாம்!

# இரத்தச் சின்னம்.

## (தொடர் கதை 18—வது பகுதி)

### 34--வது அத்தியாயம்.

அவர்கள் லண்டன் திரும்பி வரும்போது, எல்லா பத்திரிகைகளிலும் இரத்த சின்ன சங்கத்தின் புதிய விஷயம் கொட்டை எழுத்துகளில் போடப்பட்டிருந்தன. 'அதாவது:— "அன்று மாலை ஒவ்வொரு மந்திரிக்கும் ஒரு காகிதம் டைப் அடிக்கப்பட்டு வந்ததாம். அதில் கையெழுத்தோ, விலாசமோ ஒன்றுமில்லையாம். ஆனால் இரத்த சின்ன சங்கத்தின் குறி சிகப்பு வட்டம் குத்தப்பட்டிருந்ததாம். அதில் எழுதியிருந்ததாவது:—

"இன்று வரை எங்களைக் கண்டு பிடித்து, அடக்க, போலீஸாலும், தனியாக வேலைசெய்துவரும் துப்பறியும் ஸிம்ஸனாலும் முடியவில்லை. இன்ஸ்பெக்டர் பென்டனும் என்னென்னமோ செய்து பயன்பட வில்லை. நாங்கள் இதுவரை எவ்வளவு வெற்றியடைந்தோமென்று பூராவும் உங்களுக்கு தெரியாது. எங்களுடைய நடத்தையில், சில நபர்களை இவ்வுலகத்தை விட்டு நீக்கவும் நேர்ந்ததைப் பற்றி மிகவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களின் பேரில் கோபப்பட்டு கொலை செய்யவில்லை. மற்றவர்களுக்கு எங்களைப் பற்றி அச்சம் உண்டாக்கவே செய்தோம். இன்று காலைதான் லாயர் சால்மன்ஸையும் விண்ணுலகம் அனுப்ப நேர்ந்தது. அவரை ஒரு முக்கிய வேலையில் கிரீன் ஈடுபடுத்தினர். அவ்வேலையின் விசாரணையில் எங்களைக் கண்டு பிடிக்க நெருங்கி விட்டார். ஆனால் அவர் அது விஷயத்தை யாருக்கும் இதுவரை தெரிவிக்கவுமில்லை. அவருக்கு தெரிந்தது அவரோடு போகட்டுமென்று அவரை நீக்கினோம். அவர் உடம்பு பிரக்ஸ்டன் ஸ்டேஷனுக்கு அருகாமை கிடக்கும்.

எங்களை போலீஸால் பிடிக்க முடியாததாலும், எங்களுடைய நடத்தை ஜனங்களுக்கு பிடிக்காததாலும், எங்களுடைய நடவடிக்கைகளை முடிக்க, ஒரு தீர்மானத்திற்கு வந்துள்ளோம். எங்களுக்கு 10 லக்ஷம் பவுண்ட் கொடுப்பதானல் எங்களுடைய நடவடிக்கைகளை நிற்பாட்டிக் கொள்ள உத்தேசம். பணம் கொடுக்க ஒத்துக் கொண்டபின், எவ்வாறு எங்கு யாருக்கு கொடுக்க வேண்டு

மென்ற விபரத்தைத் தெரிவிக்கப்படும். ஆனல், அத்துடன் நாங்கள் யாரென்று பின் தெரிந்தால் எங்களை, இதுவரை செய்து வந்த அட்டூழியங்களுக்காக தண்டனை கொடுக்காமல் மன்னிப்பு செய்வதாக வாக்குறுதி வேண்டும்.

எங்கள் நிபந்தனைகளுக்கு ஒத்துக்கொள்ளாவிடில், பயங்கர மான சமாச்சாரங்கள் பின் தொடரும். இதில் 12 மந்திரிகளின் பெயர்களைக் குறித்துள்ளோம். எனது நிபந்தனைகளுக்கு ஒத்துக் கொள்ள இந்த 12 பேரும் பிணையாக நிற்க வேண்டும். இந்த வாரத்தின் முடிவில் கவர்ன்மென்ட் எங்கள் நிபந்தனைகளை ஒத்துக் கொள்ளாவிடில், இந்த 12 பேரில் ஒருவரை நீக்கப்படும்.''

இன்ஸ்பெக்டர் பெண்டன் மந்திரி சபை கட்டிடத்திற்குள் நுழைந்ததும் முதலில் கவலையுடன் அங்கு நின்று கொண்டிருந்த ஸிம்ஸனை சந்திக்க நேர்ந்தது. "இப்புது விஷயத்தைக் கவனிக்க, மிக பயமாக யிருக்கிறது. இந்த சங்கத்தை கூடிய சீக்கிறம் பிடித்து விடலாமென்று நினைத்திருக்கும் சமயத்தில் இச்சமாச்சாரம் வந்துள்ளது'' என்று ஸிம்ஸன் சொல்லிக்கொண்டே பெண்டனின் கையைப் பிடித்தவாறு வராண்டா பக்கம் இழுத்து போய், "இதனல் எனது மீன்வேட்டையும் இன்று தடைப்பட்டது'' என்ருர்.

உடனே இன்ஸ்பெக்டருக்கு பழைய ஞாபகம் வந்து "ஓஹோ ஆம், இன்று நீங்கள் இறந்து போகப்போகிற நாள்! ஆனல் தற் போது இரத்த சின்ன சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறித்த படி அவர்கள் நடத்தைகளை நிற்பாட்டுவதில், நீங்களும் தப்பித் தீர்கள் போலும்'' என்று சொல்ல, ஸிம்ஸன் சிறித்தார்.

"நாம் இந்த சபைக்கு போகுமுன், நான் உங்களுக்கு கீழிருந்து வேலை பார்த்து வர தயாரென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது என்னை போலீஸில் சேர்த்துக்கொள்ள, இந்த மந்திரி சபை ஏற்பாடு செய்யப்போவது உங்களுக்கு தெரியு மென்று நினைக்கிறேன். அதுவுமல்லாமல் இந்த இரத்த சின்ன சங் கத்தைக் கண்டு பிடிக்கும் பொறுப்பை எனக்குக் கொடுக்கப் போகிருர்களாம். நானும் இதைப் பற்றி கேள்வி பட்டதும், என்னல் முடியாதென்று தெரிவித்து விட்டேன். இவ்வேலைக்கு உங்களைத்தவிர பொறுப்பான ஆள் வேறு யாருமில்லை யென்று நான் துணிந்து சொல்கிறேன். நானும் உங்களைத்தவிர வேறு யாரின் கீழும் வேலை செய்யத் தயாராயில்லை'' என்று ஸிம்ஸன் சொன்னர்.

"நீங்கள் சொல்வதைப்பற்றி மிக சந்தோஷம். ஆனல் மந்திரி சபை என்ன ஏற்பாடு செய்யுமோ!'' என்று இன்ஸ்பெக்டர் பதில் சொன்னர்.

ஒரு பெரிய ஹாலில் மந்திரி சபை கூடியது. இரத்தச் சின்ன சங்கத்தின் கடிதம் கிடைத்த எல்லா மந்திரிகளும் வந்திருந்தனர். ஸிம்ஸனும் பென்டனும் வெளியிலேயே நின்றனர். சிறிது நேரத்திற்குப்பின் ஸிம்ஸன் சபைக்கு அழைக்கப்பட்டார். அதற்கு 15 நிமிஷத்திற்குப்பின் பென்டனும் அழைக்கப்பட்டார்.

பென்டன் உள் நுழைந்ததும் அங்கு குழுமியிருந்த மந்திரிகளைக் கவனித்தார். எல்லோரும் இவருக்கு தெரிந்தவர்கள். இருந்தாலும் அவர்களின் எண்ணங்களுக்கும் இன்ஸ்பெக்டரின் எண்ணத்திற்கும் மாற்றம். அவர்களுள் யாரும் இவருக்கு பிடிக்காது. இவரும் அவர்களுள் யாருக்கும் பிடிக்காது. இவர் வந்ததும் எல்லா முகங்களும் இவர்பேரிலுள்ள வெறுப்பைக் காட்டின.

"மிஸ்டர் பென்டன்" என்று பிரதம மந்திரி மெதுவாகப் பேசத் தொடங்கினர். "நாங்கள் தற்போது இரத்தச் சின்ன சங்கத்தைப் பற்றி பேச இங்கு கூடியுள்ளது உங்களுக்கும் தெரியும். இதுவரை போலீஸின் பொறுப்பாக யிருந்த இரத்தச் சின்ன சங்கம் தற்போது தேசிய விஷயமாகி விட்டது. எல்லா மந்திரிகளுக்கும் கடிதம் எழுதி யிருக்கிறுர்கள். நீங்களும் அதை பத்திரிகையில் படித்திருக்கக் கூடும்"

"ஆம். படித்தேன் ஸார்" என்று இன்ஸ்பெக்டர் பதில் சொன்னர்.

"நீங்கள் இதுவரை இச்சங்கத்தை கண்டு பிடிக்க செய்த உபாயங்கள் யாதும் பிரயோஜனத்தைத் தரவில்லை என்பது எங்களுக்கு அதிருப்தியை கொடுத்துள்ளது என்று மறைக்காமல் உங்களிடம் சொல்லி விடுகிறேன். உங்களுக்கு எல்லாவித அதிகாரமும் கொடுத்தோம். அதுவுமல்லாமல் நீங்கள் கேட்ட........" என்று சொல்லியவாறு பக்கத்திலுள்ள காகிதங்களுள் ஒன்றை தேடினர் பிரதமர்.

"நீங்கள் அவைகளைச் சொல்ல வேண்டியதில்லை. எனக்கே தெரியும். எனக்கு எல்லாவித சௌகரியங்களும் அதிகாரங்களும் கொடுத்தீர்கள்" என்று இன்ஸ்பெக்டர் பதில் சொன்னர்.

"ஆம். அவ்வாறெல்லாம் அதிகாரங்கள் கொடுத்தும், சில கொலைகள் நடக்கும் யிடத்தில் நீங்கள் இருந்தும், இதுவரை கொலையாளியை பிடிக்க முடியவில்லை"

இன்ஸ்பெக்டர் "ஆம்" என்று தலையை அசைத்தார்.

"அதனல் நாங்கள் இந்த கேஸை துப்பறியும் ஸிம்ஸனிடம் ஒப்படைக்கலா மென்று முதலில் அபிப்பிராயப் பட்டோம். அவர்

இதற்கு மறுத்து, உங்கள் வசமே இந்த கேஸ் யிருக்க வேண்டு மென்றும், அவர் உங்களுக்கு உதவியாக யிருப்பதாகவும் தெரிவித்தார். நீங்களோ கமிஷ்னரிடம் ராஜிநாமா எழுதி கொடுத்து விட்டீர்கள். அந்த ராஜிநாமா நாங்கள் ஒப்புக் கொள்வதை தற்காலிக மாக நிற்பாட்டி யுள்ளோம். தற்போது நான் சொல்வதை நன்ருக கவனியுங்கள். இரத்தச் சின்ன சங்கம் கேட்கும் நிபந்தனை நம்மால் ஒப்பமுடியாது. ஒப்புவதும் சட்டத்திற்கு விரோதம். தற்போது ஷை சங்கம் பயமுறுத்தியுள்ள ஒவ்வொரு மந்திரியையும் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு. உமது வாழ்க்கையின் பெருமை இதில்தானிருக்கிறது" என்று பிரதமர் சொல்லி முடித்தார்.

இன்ஸ்பெக்டர் போக மெதுவாக எழுந்து "இரச்தச் சின்ன சங்கம் அவர்கள் குறித்தபடி ஏற்பாடு செய்ய முயன்ருலும், உங்கள் கவர்ன்மென்ட் அங்கத்தினர் யாருக்கும் இங்கு லண்டனிலே ஒரு தீங்கும் நேரவண்ணம் நான் பார்த்துக் கொள்கிறேன். இது உறுதியான பேச்சு. இரத்தச் சின்ன சங்கத்தின் தலைவனைப் பிடிப்பதைப் பற்றி பின் பார்க்கலாம்" என்று சொன்னர்.

"ஸால்மன்ஸ் கொலையுண்டதாக எழுதி யிருக்கிறதே, அது உண்மைதானு?" என்று பிரதமர் கேட்டார்.

அதற்கு, அங்கு நின்ற ஸிம்ஸன் "ஆம். அவர் உடம்பு இன்று காலையில் கண்டு பிடிக்கப்பட்டது. அவர் ட்ரெயினில் போகும்போது வழியில் கொலை நடந்ததாக தெரிகிறது" என்ருர்.

"அநியாயம்! அநியாயம்!! இவ்வாறு கொலைகள் நடந்தால் முடிவு எப்படி?" என்று பிரதமர் கைசேதமாக சொன்னர்.

இருவரும் அந்த சபையை விட்டு வெளியே வரும்போது, வெளியே ஜனக்கூட்டம் அதிகமாக யிருந்தது. இரத்தச் சின்ன சங்க விஷயமாக பேச மந்திரி சபை கூடுவதை யறிந்து ஜனங்கள் கூடி விட்டனர். வெளியே வந்த இருவரில் ஸிம்ஸனைப் பார்த்ததும் ஜனங்கள் உற்சாகத்துடன் சந்தோஷமாக கரகோஷம் செய்தனர். பென்டனை கவனிப்பார் யாருமில்லை. இன்ஸ்பெக்டர் அதை பொருட்படுத்தாது, யாரும் கவனியாதபடி கூட்டத்தை விட்டு வெளியேறினர்.

ஊர் முழுவதும் இரத்த சின்ன சங்கத்தைப்பற்றியே பேச்சாய் விட்டது. பத்திரிகைகளிலும் இரத்தசின்ன சங்கத்தின் குறியாகிய சிகப்பு வட்டம் போடப்பட்டு, அவர்கள் பயமுறுத்தலை விபரிக்கப் பட்டிருந்தது.

குலோரியா தனது எஜமான் வருவதை உட்கார்ந்தவாறு தலையை நிமிர்ந்து பார்த்தாள். அவள் முன்னுல் அன்றைய பத்திரிகை விரித்து வைக்கப்பட்டிருந்தது. அவள் கூர்ந்து ஒவ்வொரு வரியாக பத்திரிகையைப் படித்தாள். படித்து முடித்தபின் பத்திரிகையை மடித்து பக்கத்தில் வைத்தாள். இதைப் பார்த்துக்கொண்டிருந்த ஸிம்ஸன் "குலோரியா! அவர்களின் கடைசி பயமுறுத்தல் எப்படியிருக்கிறது?" என்று கேட்டார்.

"மிக பெரிய மிரட்டல்; இருந்தாலும் சிலவகையில் அவர்களின் தைரியத்திற்கு மெச்சவேண்டியது" என்ருள்.

"அதில் என்ன மெச்ச யிருக்கிறது? எனக்கு ஒன்றும் தோன்றவில்லே. உனது மூளே சிறிது திரும்பி இருக்கிறது" என்ருர்.

"ஆம் சரியாக சொன்னீர்கள். எனது மூளே திரும்பியிருப்பதை மறக்காதீர்கள்" என்று சாந்தமாக விடையளித்தாள்.

ஸிம்ஸன் அவ்வறையை விட்டு வெளியே போக, கதவண்டை வந்தபின் திரும்பி பார்த்து "உனது இனிய கடிதங்களே பேக்கர் தெருவு பிரெளன் இனி வாங்குவதில்லே என்பதைப்பற்றி உனக்கு சந்தோஷமாக யிருக்குமென்று நினேக்கிறேன்" என்று அவர்சொல்ல அவள் அதற்கு பதில் ஒன்றும் சொல்லவில்லே.

சிறிது நேரத்திற்குள் ஸிம்ஸன் திரும்பவும் வந்து "நான் அநேகமாக எனது ஆபீஸை போலீஸ் தலைமை ஆபீஸிற்கு மாற்ற ஏற்படும். அப்படியாயின் அந்த இடம் உனக்கு பிடிக்காது என்று நினேக்கிறேன். அதனுல் நீ இங்கேயே யிருந்து, இங்குள்ள வேலேகளே கவனித்து வர வேண்டியது" என்ருர்.

"இரத்த சின்ன சங்கத்தைப் பிடிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டீர்களோ?" என்று குலோரியா கேட்டாள். "இல்லே. இன்ஸ்பெக்டர் பென்டனுக்கு அப்பொறுப்பு. நான் அவருக்கு உதவியாக இருக்கப்போகிறேன்" என்ருர்.

அத்துடன் அச்சம்பாஷணே முடிந்து, மற்ற ஆபீஸ் வேலேகளே இருவரும் செய்து வந்தனர். பிறகு ஸிம்ஸன் அன்று குலோரியா எந்தெந்த கடிதத்திற்கு என்னென்ன பதில் எழுத வேண்டுமென்பதை தெரிவித்துவிட்டு, தான் அன்று ஆபீஸுக்கு திரும்பிவர மாட்டேனென்றும் தெரிவித்து வெளிச் சென்ருர். மறுவினுடியில் டெலிபோன் மணி அடிக்கவே குலோரியா எடுத்து கேட்டாள். அதில் பேசும் குரலேக் கேட்டதும், இவள் உடம்பு சிறிது நடுங்கிற்று. "ஆம். நான் தான். காலேவந்தனம் டாம்" என்ருள்.

"ஸிம்ஸன் இருக்கிருரா?" டாம் கேட்டான்.

"இப்பொழுதான் வெளியே போனர். இன்று திரும்பிவர மாட்டார். ஏதாவது முக்கிய விஷயம் அவரிடம் சொல்லவேண்டு மானல், அவர் எங்கிருக்கிருரென்று விசாரித்து சொல்லுகிறேன்" என்று நிதானமாக பதில் சொன்னள்.

"இவ்விஷயம் முக்கியமோ, இல்லையோ, எனக்குத்தெரியவில்லை. எனது தகப்பனரின் பீரோவை காலிசெய்து கொண்டிருந்தேன். அதில் ஹட்டனைப்பற்றி எழுதப்பட்ட காகித கட்டு ஒன்றிருந்தது"

"ஹட்டனைப் பற்றியா?"

"ஆம் எனது தகப்பனருக்கு ஹட்டனைப்பற்றிய முழுவிபரம் தெரிந்திருக்கும் போல் தெரிகிறது. ஹட்டன் ஜெயிலிலும் இருந் திருக்கிருன். உனக்கு தெரியுமா?"

"இருந்திருக்கலாம். நானும் அவரை அதைப்போலுள்ள பேர் வழியாகத்தானிருப்பார் என்று நினைத்திருந்தேன்"

"எனது தகப்பனர் யாருடன் வியாபார கொடுக்கல் வாங்கல் செய்வதானலும் முதலில் அந்த ஆளின் பூரா சரித்திரத்தையும் அறிந்தபின்தான் பேச்சுவார்த்தை நடத்துவார். இந்த ஹட்டனைப் பற்றி பிரான்ஸிலிருந்து யாரோ எழுதி அனுப்பி யிருக்கிருர்கள். அதில் அவன் கெட்ட நடத்தைகளை யெல்லாம் விபரிக்கப்பட்டிருக் கிறது. அதுவல்லாமல் ஒரு கவரும் யிருக்கிறது. அதைத்திறக்காமல் ஸீல் போடப்பட்டிருக்கிறது. அதன் மேல் 'தலையை வெட்டுவதின் போட்டோ' என்று எழுதப்பட்டிருக்கிறது."

"அந்த கவரை உடைத்து பார்த்தீர்களா?" என்று அவசரமாக கேட்டாள்.

"இல்லை. ஏன் அப்படி கேட்கிருய்?"

"ஒன்றுமில்லை. டாம்! நீ எனக்காக ஒரு காரியம் செய்வாயா?"

இதுதான் முதல் தடவை அவள் டாமிடம் இரக்கமாக ஒரு வேண்டுகோளை கேட்பது.

"ஏன். என்ன செய்யவேண்டும்? உனக்காக எந்த காரியத்தை யும் செய்ய தயார்"

"அந்த கவரை உடைக்க வேண்டாம். ஹட்டனைப்பற்றிய காகிதக்கட்டை பத்திரமாக வையுங்கள்"

"இவ்வளவுதான?"

"இதைப்பற்றி வேறு யாருக்கும் தெரிவித்து விட்டீர்களோ?"

"இன்ஸ்பெக்டர் பென்டனுக்கு இதைப்பற்றி ஒரு கடிதம் எழுதி அனுப்பி யிருக்கிறேன்"

"இந்த போட்டோவைப்பற்றி யாருக்கும் தெரிவிப்பதில்லை என்று சத்தியம் செய்ய முடியுமா?"

"ஓ! வேண்டுமானல் உன்னிடமே அனுப்பி வைத்து விடுகிறேன்"

"வேண்டாம் வேண்டாம்" என்று சொல்லி திடீரென்று டெலிபோனை வைத்து விட்டாள்.

சில நிமிஷங்கள் அங்கேயே பெருமூச்சுவிட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். பிறகு எழுந்து ஆபீஸை மூடிவிட்டு சாப்பாட்டிற்காக வெளியே சென்றாள். (தொடரும்.)


## ஸீரத்துல் பாறூக்

இதாகிறது நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய இரண்டாவது கலிபாவாகிய உமர் இப்னுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சரித்திரம்.

இதில் அவர்களுடைய பிரபல்யங்களும், கீர்த்திகளும், வீரியங்களும், யுத்த சாமார்த்தியங்களும், தீனில் வழுவாது நடக்கும் நீதிகளும் அடங்கி யிருக்கின்றன. எல்லா முஸ்லிம்களுக்கும் அவர்களுடைய மகிமை புலப்பட்டிருப்பதால் நாமதை இங்கு விரித்தெழுதவில்லை. இச்சரித்திரம் வாசிக்க வாசிக்க ஆனந்தத்தையும் ஆச்சரியத்தையும் உண்டாக்குமென்பதில் ஐயமில்லை. இது இரண்டு பாகமாகும். முதல் பாகத்தில் அவர்களுடைய சரித்திரங்களும், இரண்டாம் பாகத்தில் அவர்களுடைய நீதிகளும் அடங்கி யிருக்கின்றன.

இரண்டு பாகமும் சேர்ந்தது விலை ரூ. 3

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# புனித நபிகள் பிறந்த நாளைப் போற்றுவீர்

[வேளாங்கண்ணி - கவிஞர் சாந்திதாசன்]

(1) அத்துவிதப் பொருட்கெல்லாம்—பெரும்
நித்திய நிர்மயமாக—நின்று
சத்திய சாதனைத் தோற்றும்—வல்ல
கர்த்தனின் கனிவுறும் தூதாய்—போந்த
எத்தனையோ உயர்ந்தோரில்—மகா
உத்தமராகவே மாந்தர்—ஏற்கும்
சத்குணவாளர் முஹம்மது—இன்று
இத்தரை உதயம் போற்றுவீர்!

(2) சிற்பங்கள் சிதறி வீழ்க—பொல்லா
அற்பர்கள் கொள்கை விலக—தூய
நற்பயனே ஜெயமுழங்க—தீய
தற்குறிகள் திருந்தியங்க—தம்மின்
கற்பிழந்த பெண்கள் களிக்க—பொருள்
உற்பத்தியின் வளம் கொழிக்க—அரும்
பொற்குர்ஆன் கரம் தாங்க—செய்த
ஏற்றமுற்றோர் புகழ் பாடுவீர்!

(3) கல்லார், இல்லார் என்ற பலரும்—உண்மை
பல்லறத்தின் பக்கல் சாரும்—புது
சொல்லறம் பாய்ச்சலின் சான்றாய்—சதா
வல்லவன் தொழுகையைத் தோதாய்—வகுத்
தெல்லோர்க்கும் புனரமைத்து—ஒரு
கால் நூற்றாண்டிற் கிடையே—மல்ல
நல்வரவு நிறைந்தோங்க—உய்த
வில்லர் நபியை போற்றுவீர்!

(4) ஜனநாயகத் தென்றல் வீச—மூண்ட
இனவெறித் தாண்டவ நாசம்—அன்றே
குணமது குன்றின்பால் ஆட்சி—யாக
மனம் புடைத்தோர் கண்ட மாட்சி—பல
அணியணியாய் ஆக்கியுள்ள—அந்த
கனிமிகும் நாயகர் விந்தை—நாம்
தனித்தனியே சொல்லத்தரமோ?—பொது
இனிமை அவர் செயல் பாடுவீர்!

# மறுமணம்

வழுவை வேந்தன்.

**மறுமணம் என்றால் என்ன ?**

ஒரு ஆண் பல பெண்களை தங்கள் வசதிக் கேற்றாற் போல் மணந்து கொள்கிறான். அல்லது தங்கள் துணையை இழந்து மறு முறையும் ஒரு துணையைத் தேடிக் கொள்கிறான். அல்லது பலமுறை தங்கள் துணைகளை இழந்து, பலமுறை துணைகளைத் தேடிக் கொள் கிறான். அவன் எத்தனை முறை துணைகளைத் தேடிக் கொண்டாலும், அதை சம்பிரதாயப்படிக் கூறுவது 'மறுமணம்' என்று தான்.

அதைப் போல்தான் பெண்களுக்கும். ஆனால் அவர்கள், ஆண்கள் ஒரே தடவையில் பல பெண்களை மணப்பது போல், ஒரே தடவையில் பல ஆண்களை மணந்து கொள்வதில்லை. அவர்கள் அப்படி மணப்பதற்கேற்றாற்போல், அவர்களின் இயற்கை அமைய வில்லை. அவர்கள் இயற்கைக்கு விரோதமாக பல ஆண்களை ஒரே தடவையில் மணந்தால், இயற்கைக்கு மட்டுமில்லாமல் பல வகையில் அவர்களுக்கு இன்னலே ஏற்படும். அவ்வின்னலுக்கு இடமில்லாம லிருப்பதற்காகவே பெண் ஒரு தடவையில் ஒருவனுக்கே துணையா கிறாள் என்பது யாவரு மறிந்த விஷயம். பெண், தன் துணையை இழந் ததும், வேறொரு துணையை சம்பாதித்துக் கொள்ளலாம். அப்படி அவர்கள் திரும்பத் திரும்ப துணையை சம்பாதித்துக் கொள்வதையும் சம்பிரதாயப்படி 'மறுமணம்' என்று தான் கூறுகிறோம்.

**மறுமணம் எதற்கு ஏற்பட்டது ?**

ஒருவன் தன் துணையை இழந்ததும், தன் மக்களைக் காப்பாற்று வதற்கு மிக்க அல்லலடைகிறான். அவன் வாழ்வில் ஏற்படும் பல இன்னல்களை, அவன் ஒருவனே சமாளிக்க நேறிடுகிறது. அவ் வின்னல்களை அகற்றவே ஒருவளை தன் துணையாக்கிக் கொள்கிறான். அதற்கே மறுமணம் ஏற்பட்டது.

ஒருவள் தன் துணையை இழந்ததும், தான் பெண்ணா யிருப்பதால் பல வகையில் இன்னல்களை அடைகிறாள். அவ் வின்னல்களை அவள் ஒருவளே நின்று சமாளிக்க முடியாதவளா யிருக்கிறாள். மறுமணமில்லாமல் போனால் அவ்வின்னல்களால் அவள் அழிய நேறிடும். அவள் நலமா யிருக்க வேண்டு மென்றால் மறுமணம்—விதவா விவாகம் தேவை. அதற்காகவே, பெண்கள் நலமாக வாழவே விதவா விவாகத்தை ஏற்படுத்தியுள்ளது, இஸ்லாம்.

**மறுமணத்தின் அவசிய மென்ன ?**

ஆண்களுக்கு வேண்டிய மறுமணத்தின் அவசியத்தைப் பற்றி யான் இதில் எழுத வேண்டியதில்லை. ஏனென்றால், அது யாவரும் அறிந்த விஷயமாகும். ஆனால், பெண்களுக்கு மீண்டும் மீண்டும், அவர்களுக்கு வேண்டிய மறுமணத்தின் அவசியத்தைப் பற்றியே கூற வேண்டியதா யிருக்கிறது. ஏனென்றால், அவர்கள் அவ்வப் போது பெண்மைக்கு மதிப்புக் கொடுப்பதாக எண்ணிக் கொண்டு, "மறுமணம் பெண்களுக்குக் கூடாது" என்று கூறித் திரிகின்றனர். அவர்கள் அப்படிக் கூறுவது பெண்மைக்கு மதிப்புக் கொடுப்பதல்ல, அதை நாசமாக்குவதே!

பொதுவாக, ஒரு இளம் பெண் விதவையாகி விட்டாளென்று வைத்துக் கொள்வோம். அவள் தன் இளமை இன்பத்தை எண்ணாம லிருக்க முடியுமா? விரகதாப மில்லாத விதவைகளிருப்பது அருமை தாம்! அப்படிபட்ட இளம் விதவை, தனக்கு நேரிடும் இன்னல்களை தவிர்க்க முடியாமல், மேலும் தன் வாழ்க்கைத் தோணியை செலுத்த எண்ணி வீடுக்கடந்து செல்கிறாள். ஆனால் அவள் போகும் வழியிலே, அவள் மட்டும் திக்கற்று நிற்பதால், பல இன்னல்கள் வந்து அவளை தாக்குகின்றன. அவற்றைக் கண்டு கதறுகிறாள். அவளைக் காப்பாற்றுவார் யார்? தன் வாழ்க்கைத் தோணியை மேலும் செலுத்துவதற்கு துணை யில்லாமல், இன்னல் களுக்கு அஞ்சி அவள் கெட்ட வழிகளில் செல்கிறாள். அதனால் கொடிய நோய் வாய் பட்டு துன்புற்று தாயாகிறாள். சமுதாயத்திற்கு அஞ்சி, தான் நடத்தியத் தொழிலால் தனக்குப் பிறந்த பிள்ளையைக் கொன்று, தானும் தற்கொலை செய்து கொண்டு மடிகிறாள்.

பெண்ணினத்திற்கு ஏற்படும் இது போலான இன்னல்களை எல்லாம் அகற்றி, பெண்ணுலகை மேன்மை செய்வதற்காகவே இரசூல் திலகம் (ஸல்) அவர்கள் 'விதவா விவாகத்தை' ஏற்படுத்தி னார்கள். 'மறுமணம் பெண்களுக்குக் கூடாது'—என்று கூறி திரியும் பெண்களை பேதை என்று தான் அழைக்க வேண்டும். பெண்ணுலகை மேன்மைப் படுத்துவதாக எண்ணிக் கொண்டு, பகுத்தறிவுக்குதவாதவைகளை கூறித் திரிவது நன்மையா? தீமையா? என்பதை அவர்களே ஆராய்ந்து பார்த்துக் கொள்ளட்டும்.

பெண்ணினத்தைப் பாதுகாப்பதாகக் கூறும் ஒவ்வொரு ஆண் மகனும், இரசூல் திலகம் (ஸல்) அவர்கள் காட்டிய வழிபடி ஒவ்வொரு விதவைக்கும் வாழ்வளிப்பீர்களாக!




# யானையை வென்ற வேந்தன்

(டி. எப். ரஹ்மத்துல்லா-மஆலி-பாகவி)

ஷாஹ்ஜஹான் மன்னருக்கு, யானைகளை சண்டைபோடவிட்டு அதை வேடிக்கைப் பார்ப்பதில் இஷ்டம் அதிகம். ஒரு முறை ஆக்ரா நகரில் கோட்டைக்கு அருகில், ஜம்னா நதி தீரத்துக் கரையின் வெளித் திடலில், ஷாஜஹான் மன்னர் தங்கியிருந்து யானைகளை சண்டை விட்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பாலர்களே! 'அவுரங்கஜேப்' என்ற பெயரை நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள்; அந்த மன்னர், ஷாஹின்ஷா ஷாஹ்ஜஹான் மன்னருக்கு—அழகு ராணி மும்தாஜ் வயிற்றில் பிறந்த பிள்ளைகளில் மிகச் சிறிய குமாரன்.

ஷாஹ்ஜஹான் மன்னர் யானைச்சண்டை பார்த்துக் கொண்டிருந்த போது, அவரது எல்லா இளவரசர்களான குமாரர்களும், பல்லாயிரக்கணக்கான குடிப்படைகளோடு சேர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். அப்போது அவ்ரங்கஜேபுக்கு வயது பதினைந்து (15) தானிருக்கும்.

எல்லோரைப்போல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த இளவரசர் அவ்ரங்கஜேப், தமாஷாவின் ருசியில் தன்னையும் மறந்து, சண்டையிடும் யானைகளுக்கு அருகில் போய்விட்டார். அப்போது ஒரு யானை மதம் கொண்டு, தாறுமாறாய் கிளம்பிவிட்டது. அந்த வெறி யானை, தன்ஜோடி யானையுடன் மோதிச்சண்டை போடுவதைவிட்டு, அருகில் வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த அவுரங்கஜேபின் பக்கம் திரும்பி விட்டது. இளங் கன்று பயமறியா தென்பார்கள். அவுரங்கஜேப் அந்த மதங்கொண்ட யானைக்குக் கொஞ்சங்கூட பயப்படவில்லை.

அவ்ரங்கஜேப் ஏறி இருந்த குதிரையும் மிகத் தைரியமாய் நின்று ஜகா வாங்கிக் கொண்டிருந்தது. அவ்ரங்கஜேப் குதிரையின் கடிவாளத்தை உறுதியாகப் பிடித்து, யானைக்கு முதுகு காட்டக் கூடாதென்று வீரத்தனம் காட்டினர். யானை அவ்விளவரசருக்கு வெகு சமீபத்தில் வந்து விட்டது. அப்போதும் அவர் பயப்படாதிருந்தார். பத்திருபது அடிதூரம்தான் இருக்கும். உடனே அவ்ரங்கஜேப், தன் கையிலிருந்த கூர்மையான ஈட்டியை, மதங்கொண்டு

எதிர்க்க ஓடிவரும் யானையின் மத்தகத்தை நோக்கி எறிந்து குத்தினர்.

இந்த திடீர் சம்பவத்தைக் கண்டு பயந்து பீதி கொண்ட ஜனங்கள், சிதறி நாலா பக்கமும் ஓடத் தலைப்பட்டார்கள். படைசிப்பாய்களும்கூட 'உயிர் வெல்லம்' என்று தப்பித்து ஓடத்தயாரானர்கள்.

ஆனல், சமயோசிதமாக சில வீரர்கள், யானையை நோக்கி புஸ்வாணத்தை விட்டு யானைக்கு அச்சத்தை உண்டுபண்ண முயன்றார்கள். ஒன்றுக்கும் அந்த மதங்கொண்ட யானை மதியாமல், நேரே அவ்ரங்கஜேபின் பக்கம் பாய்ந்து, துதிக்கையால் அவரை குதிரை மேலிருந்து கீழே தள்ளிவிட்டது.

அவ்ரங்கஜேப் கீழே வீழ்ந்தும் தைரியம் இழக்காமல், சட்டென்று எழுந்து நின்று, தன் உடைவாளை எடுத்து யானையின் துதிக்கை மீது வீசி, போராடலானர்.

அதற்குள் சட்டென்று, மூத்த சகோதரரான ஷுஜா என்பவர் தம் குதிரையை வேகமாய் ஓட்டி வந்து, வாளினல் யானையைக் குத்தி, அதன் கவனத்தை வேறு பக்கம் திருப்பினர். ஆனல், ஷுஜாவுடைய குதிரை மிரண்டு போய், தன் எஜமானனை கீழே தள்ளி விட்டு ஓடிப்போய் விட்டது.

இதற்குள், வேருெரு யானை, முன்சொன்ன மதயானையை எதிர்த்து சண்டைபோடத் தொடங்கியது. நாலா பக்கமும் எதிர்ப்பைக் கண்ட அந்த மதங்கொண்ட யானை பயந்து மைதானத்தை விட்டே ஓடத்தலைப்பட்டது. அவ்ரங்கஜேபும் அதை பயமுறுத்தி விரட்டினர்.

இங்ஙனம் சிறுவயதிலேயே வீரமாய் யானையை எதிர்த்துப் போரிட்டுத் துரத்திய இளவேந்தன் அவ்ரங்கஜேபை, தந்தை மன்னர் ஷாஹ்ஜஹான் பெரிதும் பாராட்டி, கட்டியணைத்து மார்ப்புறத் தழுவிக் கொண்டார். வீர மைந்தனுக்கு தக்க பரிசுகளும் கொடுத்து "பீல் அப்கன்" (யானையை வென்றவன்) என்ற பட்டமும் அளித்தார்.

அவ்ரங்கஜேபின் முழுப் பெயர் "முஹியித்தீன் முஹம்மத் அவ்ரங்கஜேப் ஆலம்கீர்" என்பதாகும். இவர் மிகவும் நல்லவர்; மதபக்தியுள்ளவர்; முஸ்லிம்களை நேசிப்பவர்; ஹராம்—ஹலாலைப் பகுத்துணர்ந்து ஒழுகுபவர்; அரசாட்சி நடத்தியபோதும் தொப்பி தைத்தும், திருக் குர்ஆன் பிரதி எழுதியும் சுய சம்பாத்தியப் பொருள் கொண்டு, சொந்தச் செலவுகளை நடத்துபவரா யிருந்தார். அவர் பெயர் ஓங்குக!

———

# உத்தம நபியின் உதய தினம்

(மு. கி. அ. சா. அஹ்மத்மீரு-சீருடைய புரம்)

அவனிக்கு அருளொளியாக வந்துதித்த அண்ணல் நபியின் உதயதினம் அண்மையில் வந்துவிட்டது.

அப்புனித உதயதினத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்த ஆவல் நிறம்பிய ஒவ்வொரு உள்ளங்களும் மகிழ்ச்சியால் மலருகிறது.

அருளாளனின் அன்பின் சின்னமாகிய வள்ளல் நபியின் பண்பு மிக்க வாழ்க்கை முறைகள்,—உலகத்திற்கே ஒரு ஈடிணையற்ற புதிய சகாப்த மொன்றை இறையாக்ஞைபடி நிறுவ—அவர்கள் செய்த அருந் தொண்டுகள், இவைகளை யெல்லாம் ஒருங்கே ஒருமித்துக் காட்டும் உயர் தினம் (மீலாதே ஷரீப்) நபிகள் பிரானின் உதயதினம்!

உண்மையும் உணர்ச்சியும் கொண்டுள்ள ஒவ்வொரு இறை விஸ்வாசிக்கும் சொல்வதற்கரிய மகிழ் வெய்தவைக்கும் இம்மகத்தான இப்புனித 'தினம்' மீண்டும் மீண்டும் (இறையருளால்) நம்முன்னே கண்டுகளிக்க வருகிறது—இல்லை, அவனியிலுள்ளோர் அரிய படிப்பினையை அதன் மூலம் பெற்று ஆற்றல் மிக்கவர்களாய்—அறிவுடையோராய்த் திகழ்வதற்காக வேண்டித்தான் வருகிறது.

அறிவைப் பரப்பிட அரும்பாடுபட்ட அண்ணல் நபி! நேரிய வழிகள் பல புகன்று சீரிய செயல் புரிந்த சிறந்த நந்நபி! மனிதவர்க்கம் உய்ய மகத்தான பணிபல புரிந்து-பாரெல்லாம் புகழ்ந்திட்ட பண்பு மிக்க நபி! துன்பங்கள் களைந்து தூய்மை வளர்த்திட-துயர் பல அடைந்தாலும் அயர்வின்றி உழைத்த உத்தம நபி! துன்பத் தளையில் கட்டுண்டு துவண்ட மக்களினத்திற்கு, இன்பந் தரும் வழியைக் காட்டி-வாழ்வு தந்த வள்ளல் நபி! மனித வர்க்கத்தின் மாண்பினையை எண்பித்துக்காட்ட வழி வகுத்துத் தந்திட்ட மாநபி! சகோதர பந்தத்தின் சமதர்மத்தினையைச் சீரிய முறையிலே செப்பிவிட்டுச் சென்ற செம்மல் நபி! புதிய சகாப்தத்தை மக்களிடையே நிறுவி மக்களை மாண்புடன் பொலிவுறச் செய்திட்ட புதுமை நபி! அவர்களின் உதய தினம் உலக மக்களுக்கு உயர்ந்த அரியதொரு படிப்பினையை தருவனவா யிருக்கிறது.

அண்ணல் நபி அவனிக்கு அவதரித்த அன்றைய தினத்திலே—வள்ளல் நபியின் வாழ்க்கை வரலாறுகள் பற்றி சிறந்த சொற்பொழிவாளர்களைக் கொண்டு விரிவான முறையிலே விளக்கிக் காட்ட வேண்டும் மக்கள் மன்றத்திற்கு.

உத்தம நபியின் உதய தின விழாவை விமரிசையுடன் வெற்றிகரமாக நடாத்துவதிலே நாம் இன்பம் பெற வேண்டும்.

அண்ணல் நபியின் அனுஷ்டானத்தைப் பின்பற்றி அனைவரும் அல்லாஹ் அருள் பெற்று வாழ்வோமாக.

# சைதத்துப் படைப்போர்
## வசன காவியம்

இது ஹஜ்ரத் அமீறுல் மூஃமினீன் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் குமாரர் அப்துல் றஹ்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அமீர் சுபியான் என்னும் ஒரு அரசனேடு வெகு சாமர்த்தியத்துடன் யுத்தஞ் செய்து அவனுடைய மகளாகிய செய்தத்துவை கலியாணஞ் செய்து மதினத்திற்கு வந்தது முதலிய விஷயங்கள் நிறம்பியுள்ள ஒரு அற்புதமான கிரந்தமாகும். இதை வாசிக்கவும் கேட்கவும் வெகு இன்பகரமா யிருக்கும். இதைப்பற்றி நிறம்பச் சொல்லவேண்டியதில்லை. இதானது மலையாளம் குஞ்சு மூசாப்புலவர் அவர்களால் செய்துள்ள செய்தத்துப் படைப்போர் என்னும் காவியத்தையே வசன ரூபமாகச் செய்யப்பட்டது. வசனம் விலை அணா. 12

ஷை பாடல் விலை அணா. 12

## மஜ்மூஉ முஃஜிஸாத்துர் றஸூல்

இந்த புஸ்தகமாகிறது நமது நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அற்புதங்களாகிய 1011 முஃஜிஸாக்களை ஒழுங்கு திரட்டி "மஜ்மூஉ முஃஜிஸாத்துர் றஸூல்" என்னும் நாமமிட்டு 3 வால்யமாக அச்சிடப்பட்டிருக்கிறது. இதர நபிமார்களுடைய அற்புதங்களை விட நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய முஃஜிஸாத்தென்னும் அற்புதமாகிறது மிகவும் அருமையானது. இதில் 1-வது வால்யம் 395 முஃஜிஸாத்துகள் அடங்கியன.

கிளேஸ் கலிகோ பைண்டு விலை ரூ. 2–14–0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# "வின்ஸ்டன் சர்ச்சில்"

(முஹம்மது தாவூது)

## (6—வது பகுதி)

பொக்கிஷ மந்திரி என்ற முறையில் சர்ச்சிலின் சாதனையை அவரது அடிவருடிகள்கூட புகழ்வதில்லை. 1925-ம் வருடத்தில் ஸ்டான்லிபால்டுவின் தலைமையில் அமைந்த டோரி (கன்ஸர்வேடிவ்) கட்சி அரசாங்கத்தில் பொக்கிஷ இலாக்கா பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டிருந்தார். (லிபரல் கட்சியினருடன் சண்டையிட்டுக் கொண்டு, கான்ஸ்டிட்யூஷன் கட்சி பிரதிநிதி என்ற முறையில் பார்லிமெண்டுக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். இப்புதிய கட்சியில் சர்ச்சிலைத் தவிர வேறு எவருமில்லை) அந்தக் காலத்தில் பொருளாதாரத்துறையில் க்ஷீணதசை நிலவியது; தொழிலாளர்களிடையே அதிருப்தியும் அதன் விளைவாக அமைதியின்மையும் நிலவிவந்தது. வேலை நிறுத்தங்களும் பெரும் அளவில் ஏற்பட்டு வந்தன. பிரிட்டிஷ் கரன்ஸியை தங்கத்துக்குச் சமமான நிர்ணயத்தில் அவர் நிர்ணயித்தார். வேலை நிறுத்தங்களை அடக்குவதற்காக அவர் துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டார். பொதுவாக, தமது புதிய டோரிசகாக்களைவிட வலது சாரியினருக்குப் பெரிதும் சாதகமான போக்கை அவர் அனுஷ்டித்தார். அவர் மித மிஞ்சிப் போய் விட்டார் என்ற பழைய கூக்குரல் மீண்டும் கிளம்பிற்று. அவரது நடத்தையிலும் நடவடிக்கைகளிலும் டோரிகள் கூட சந்தேகம் கொள்ளலாயினர். "யுக்தி இல்லாத மேதை" என அவரை ஆக்ஸ்போர்டு பிரபு அழைத்தது சரியல்லவோ என அவர்கள் ஆச்சரியத்துக்குள்ளாயினர்.

சுருங்கச் சொல்லுமிடத்து, அநேகமாக ஒருவருக்குக்கூட அவர் 'பிடி' கொடுக்கவில்லை. ஸாண்ட் ஹர்ஸ்டுக்குப் பிறகுள்ள காலத்தில் ஐந்து போர்களில் அவர் கலந்து கொண்டிருக்கிறார், ஒன்பது இலாக்காக்களை நிர்வகித்துள்ளார் (இது என்றுமில்லா சாதனை); எண்ணாயிரம் பொதுக்கூட்டங்களில் சொற்பொழிவாற்றியுள்ளார். இங்கிலாந்திலே பொதுஜன ஆதரவுள்ள மனிதராகவும் பொதுஜன வெறுப்பு பெற்ற பேர்வழியாகவும் அவர் திகழ்ந்தார். 1929-ம் வருடத்தில் மெக்டொனல்டின் சோஷலிஷ்டு கிளர்ச்சியின் காரணமாக டோரி அரசாங்கம் வீழ்ச்சியுற்றதும், வழக்கம்போல ஒவ்வொருவரும் சர்ச்சில் மீது பழி சுமத்தினர். பார்லிமெண்ட்

அங்கத்தினராக இருந்த போதிலும் அரசாங்கத்தில் உயர்தர பதவியை அவர் இழக்க வேண்டியதாயிற்று. அரசியல் வனவாச காலத்தில் அவர் பிரவேசித்தார். பத்துவருட காலம்வரை அவர் அரசியல் துறஉறம் பூண்டு ஒதுங்கி வாழ்ந்து வந்தார்.

1929-ம் வருடத்துக்கும் 1939-ம் ஆண்டுக்கும் இடையிலுள்ள இப்பத்து வருட காலத்தில் எழுத்துலகில் அவர் பிரவேசித்தார். ஏற்கனவே, நான்கு வால்யூம்களில் "உலக நெருக்கடி" என்னும் நூலை அவர் பிரசுரித்திருந்தார். இப்போதுஇன்னும் பெரியதொரு நூல் எழுதுவதில் அவர் தீவிரமாக ஈடு பட்டார். "மார்ல்பரோ—அவரது வாழ்க்கையும் காலமும்" என்பதே அந்த பிரம்மாண்டமான நூல். "உலக நெருக்கடி" என்னும் நூலில் யுத்தத்தைப் பற்றித் தமது சொந்த வியாக்கியானங்களை அவர் அளித்திருந்தார். இந்நூலைப் பற்றியவிமர்சனம் ஈடு இணையற்றதாக விருந்தது. அவரது அரசியல் எதிரிகளுக்கு எரிச்சலை யுண்டாக்கியது அது. ஆனால் அது ஒரு மகத்தான வெற்றி. இந்நூல் பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கும் பொழுது சர்கானன்டாயல் சொன்னார்: "சர் வின்ஸ்டன் சர்ச்சில் அவரது காலத்தில் வாழ்கிறவர்களைவிட மிக நேர்த்தியான உடை நடை எழுதும் ஆற்றல் பெற்றிருக்கிறார் என்பதை நெடுங்காலமாக நான் ஒப்புக்கொண்டு வந்திருக்கிறேன்".

சஞ்சிகைகளுக்கு எழுதிய கட்டுரைகளுக்காக அவர் பெற்ற பணம் மிக அதிகமாகும்; அவருக்கு அளிக்கப்பட்டதைப் போல வேறு எவருக்கும் அவ்வளவு பணம் அளிக்கப்படவில்லை. அவரது கட்டுரைகளும் சாலச் சிறந்தவையாக விருந்தன. உதாரணமாக, அமெரிக்காவில் பிரசங்க சுற்றுப்பிரயாணம் நடத்தியபோது, நியூ யார்க் டாக்ஸியால் மோதப்பட்டு ஆஸ்பத்திரிக்கு அவர் கொண்டு செல்லப்பட்டார். குற்றச்சாட்டிலிருந்து டாக்ஸிடிரைவரை முதலில் விடுவித்து "உலக நெருக்கடி"யில் கையெழுத்திட்டு அதனை அம் மனிதரிடம் அன்பளிப்பாக வழங்கினார். பின்னர் ஆஸ்பத்திரியில் படுக்கையில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டே விபத்து விவரத்தைப் பற்றிக் கட்டுரை எழுதி அதனை விற்பனை செய்தார். இந்த வருமானமும் அவரது அன்னையிடமிருந்து கிடைத்த சொத்தும் சர்ச்சில் தம்பதிகள் உயர் வகுப்பு குடும்பத்தினரைப்போல வாழ்க்கை நடத்துவதற்கு ஓரளவு போதுமானதாக விருந்தது. கரையோரப் பிரதேசத்துக்கு வரும் கப்பல் மாலுமியைப்போல, சர்ச்சில் தாராளமாக பணம் செலவழித்து வந்தார். சூதாட்டத்தில் சமயசந்தர்ப்பங்களில் சரி சமான அளவில் அவர் பணம் தோற்றிருக்கிறார்.

தம்பதிய வாழ்வு துவங்கியதிலிருந்து செலவு விஷயத்தில் சர்ச்சில் அசட்டையாக இருந்தமையால் அவரது மனைவி ஸ்காட்லாந்து

தேச மக்களுக்கே உரிய சிக்கனத்தைக் கடைப்பிடித்து வாழ்க்கை என்னும் படகு கடன் என்னும் சூறுவளியில் சிக்கிச் சிதறுண்டு விடாதபடி தவிர்த்து, தடுத்து வந்தார். சர்ச்சில் தம்மை ஒரு மார்ல் பரோ என நினைத்துக் கொண்டிருப்பதாகவும் தமக்கு சக்தியிருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒரு பிரபுவுக்குரிய ஆடம்பரத்துடன், அதிகாரத்துடன் தாம் வாழ்ந்துவரவேண்டு மெனக் கருதிக்கொண்டிருப்பதாகவும் அவரது நண்பர்கள் கூறுகின்றனர். பழைய நண்பரொருவர் ஒரு சமயம் கூறியதாவது:—"மிகச்சிறந்த வஸ்துவை அளித்தால் மிஸ்டர் சர்ச்சில் வெகுசுலபமாக திருப்தியடைந்து விடுவார்" இவ்வாருக சர்ச்சில் தம்பதிகள் உயர்குல குடும்பத்தினரைப் போல உயர்தர வாழ்க்கை நிலையை நிலைநிறுத்தி வந்திருக்கின்றனர்.

இலக்கியத் துறையிலிருந்து கிடைத்த வருமானத்தைக்கொண்டு 1924ம் ஆண்டில் சர்ச்சில் தமது தற்போதைய மாளிகையைக் கிரயம் வாங்கினர். சார்ட்வெல் என்னும் அம்மாளிகை இருநூறு ஏக்கர் விவசாய பூமியும் எண்பது ஏக்கர் தோட்டமும் இரு ஏரிகளும் மூன்று சிறுவீடுகளும் பத்தொன்பது படுக்கை அறைகளையுடைய ஒரு பிரதான வாச ஸ்தலமும் உள்ளதாக இருக்கிறது. இந்த இடத்தைக் கிரயம் வாங்கிய சிறிது காலத்துக்குப் பிறகு, கொல்லத்துக்காரர்கள் வேலை செய்வதை அவர் கவனித்தார். உடனே, ஒரு கொல்லரும் சில செங்கற்களையும் எடுத்துக்கொண்டு இடிந்த ஷெட்டைப் பழுதுபார்த்துக் கட்டும் வேலையில் அவர் ஈடுபட்டார். கொல்லத்து வேலை செய்வதாயிருந்தால் யூனியனில் அங்கத்தினராவது அவசியம் என்பதை மேஸ்திரி எடுத்துரைத்தபோது ஒரு நிமிஷத்துக்கு இரு செங்கற்களை வைத்து அடுக்கப் பழகும்வரை தாமதித்திருந்து பின்னர், யூனியன் அங்கத்தினராவதற்கு மனுச்செய்து கொண்டார்.. அவரது இந்த மனு கொந்தளிப்பு ஏற்படுத்தியது. இச்செயல் அபாயகரமான அவமரியாதையுண்டாக்கும் என ஸ்தல யூனியன் கருதியது. முதல் வாரத்தில் தமக்குகிடைத்த கூலியான ஒன்பது ஷில்லிங்கை யூனியனில் செலுத்தி அங்கத்தினராகப் பதிவு செய்து கொண்டு கொல்லத்து வேலையை மேற்கொண்டார். 1929ம் வருடத்தில் நீச்சல் குட்டையை அவரே கட்ட ஆரம்பித்தார். காங்க்ரீட் தரையை அவரே நிர்மாணித்து, இயற்கை முறைகளில் நீரைச் சூடாக்குவதற்கான உபாயத்தையும் அவர் கண்டுபிடித்தார். குட்டையை நிரப்பும் தண்ணீர் தாழ்வில்லாத கற்படிகளின் வழியாக வடிந்தோடுகிறது. இதனல் நீந்துவதற்குத் தேவையான வெதுவெதுப்புத் தன்மையை சூரிய உஷ்ணத்திலிருந்து பெறுகிறது. இந்த உபாயம் ஓரளவு வெற்றியளித்தது. பிறகு, ஒரு ஷெட்டில் உலைக்களமும் வெக்கீர் கொப்பரையும் நிர்மாணிக்கப்பட்டது.

அரசியல் நீதியிலே பார்க்குமிடத்து இக்காலத்தில் சர்ச்சில் அசாதாரண நிலையில் இருந்தார். பார்லி மெண்டில் அவர் அங்கம் வகித்துக்கொண்டி ருந்தபோதிலும் அவருக்குச் செல்வாக்கு இருக்க வில்லை. அவரது பேச்சு "வானந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சப்த" மாகவே இருந்து வந்தது. ஒருபுறம் சோஷலிஸ்டுகளைத் தாக்கி யும் மற்றொருபுறம் உறக்கத்துக்காளாகி யிருந்த கன்ஸர்வேடிவ்களை எதிர்த்தும் அவர்பேசி வந்தார். ஜெர்மனியும் இத்தாலியும் முன்னே றிக்கொண்டிருந்தன. ஹிட்லரின் ஹிம்சை அதிகரித்து வருவதைக் கவனித்ததும் இங்கிலாந்து ஆயுதபாணியாவது அவசியம் என எச்ச ரித்தார். பிற்காலநிகழ்ச்சிகளை முன்கூட்டி அறியும் தூரதிரஷ்டிக்கண் இல்லாத குருட்டு சமுதாயத்திலே அவர் ஒருவரால் தான் பின்னர் சம்பவிக்க விருந்த பேராபத்தை உணர்ந்து கொள்ள முடிந்தது. அவர் எச்சரிக்கை செய்த வண்ணமாக விருந்தார்.

பாசிஸ்டுகளுக்கு எதிராகத் தன்னந்தனியே அவர் அனுஷ்டித்த போக்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும். பார்லிமெண்ட் பிரசங்கங்களி லும் பத்திரிகைக் கட்டுரைகளிலும் நாஜி பயமுறுத்தல்களை அவர் வன்மையாகக் கண்டித்து வந்தார். சபையில் வேண்டு மென்றே ஒரு மூலையில் ஒரு ஆசனத்தைத் தெரிந்தெடுத்து அங்கு அமர்ந் திருந்தவாறு அவர் பின்கண்டவாறு முழங்கினர்: "நீங்கள் உறுதி யான போக்கு அனுஷ்டிக்க வேண்டிய காலம் வரும் என நான் கூறுகிறேன். அந்தக் காலம் வரும்போது, விவேகமில்லாத கொள்கை காரணமாக வேறு எவரது ஆதரவும் இல்லாமல் தன்னந்தனியே நாம் நிற்கவேண்டிவரும்". ஹிட்லரின் விட்டுக்கொடா மனப்பான்மை யின் காரணமாக அந்த நாஜி தலைவரை தாஜா செய்வதற்காக குடை யும் கையுமாக சேம்பர்லேன் சென்ற போது, சர்ச்சில் கோபா வேசத்துடன் எழுந்திருந்து எந்த நாசப் பாதையில் நாம் இழுத்துச் செல்லப்படுகிறோமோ அந்த நாசத்தின் பரிமாணத்தை சமுதாயம் உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம் என அவர் குறிப்பிட் டார்.

ஆரம்பத்திலிருந்து சர்ச்சில் கூறிவந்தவை உண்மை தான் என்பதை காலம் கடந்து பிரிட்டன் உணர்ந்து கொண்டது. ஏதா வதொரு வழியில் இரத்தம் சிந்தாமல் ஹிட்லரின் கொட்டத்தை அடக்கியிருக்க முடியும் என இன்றைய நிபுணர்கள் கூறுகிறார்கள். ஒவ்வொரு தடவையும் நடவடிக்கை எடுத்து கொள்ளுமாறு சர்ச்சில் கூறிய யோசனை செவிடன் காதில் ஊதிய சங்குபோல பயனளிக்க முடியாமற் போயிற்று. நிலைமை மோசமாகியது. 1939-ம் வருடம் செப்டம்பர் மாதம் முதல் தேதி போலந்தை ஹிட்லர் ஆக்கிரமித்தார். இரு தினங்கள் கழித்து ஜெர்மன் மீது பிரிட்டனும் பிரான்ஸூம் போர்ப் பிரக்கடனம் செய்தனர்; அன்று மாலை, கப்பற் படை இலாக்

காவில் பழைய பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு சர்ச்சில் அழைக்கப்பட்டார். ரேடியோ சமிக்ஞை கொடிகள் ஆகியவற்றின் மூலம் கப்பற் படையின் எல்லா யூனிட்டுகளுக்கும் "சர்ச்சில் திரும்பி வந்து விட்டார்" என்ற செய்தி பரப்பப்பட்டது.

பொது மக்களின் ஆதரவும் அவருக்குக் கிடைத்தது. யுத்தம் துவங்கி விட்டதென பார்லிமெண்டில் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டபோது சபைக்குள் அவர் நுழைந்ததும் இரு கட்சியினரும் எழுந்திருந்து சந்தோஷ ஆரவாரம் செய்தனர். ஒரு வாரத்துக்கு முன்புவரை அவரை அவர்கள் தூற்றி, தூஷித்துக் கொண்டிருந்தனர் என்பது இங்கு நினைவு கூறத்தக்கது.

ஆனல் அந்தக் காலம் இங்கிலாந்தின் சரித்திரத்திலேயே அபாயகரமான காலமாகும். யுத்தத்துக்கு சமுதாயம் தயாராக இருக்க வில்லை, அதற்கு வேண்டிய ஆயத்தங்களை அவர்கள் சரிவரச் செய்திருக்க வில்லை. கப்பற் படையினருடன் அவர் ஒன்பது மாத காலம் தங்கி யிருந்தபோது, சந்தோஷ சமாசாரம் எதுவும் கிடைக்க வில்லை. அடிக்கடி நீர்மூழ்கிக் கப்பல்கள் மூழ்கடிக்கப் பட்டது, பிரிட்டிஷாருக்கு அதைரிய மூட்டுவதாக விருந்தது.

பல்லாண்டுகளுக்கு முன்பு, அரசியல் துறையிலே அருவருக்கப்பட்டு வந்த ஒரு சமயத்தில் நண்பரொருவருடன் பேசிக்கொண்டிருந்த போது, "என்றுவது ஒரு நாள் நான் பிரதமமந்திரி ஆகலாம் என்ற சாத்தியம் இல்லாதிருந்திருக்குமானல் அரசியலிலிருந்து நான் நிரந்தரமாக விலகி விடுவேன்" என இரகசியமாக அவர் கூறியிருந்தார். 1940-ம் வருடம் மே மாதம் 10-ந் தேதி இங்கிலாந்தின் சரித்திரத்திலே மிக நெருக்கடியான சமயத்தில் அவரது விடா முயற்சிக்குக் கைமேல் பலன் கிடைத்தது. நார்வே வீழ்ந்து விட்டது; சேம்பர்லேன் பதவி துறந்து விட்டார். இங்கிலேயில், மந்திரி சபை அமைக்குமாறு சர்ச்சிலுக்கு ஜார்ஜ் மன்னர் அழைப்பு விடுத்தார். அரசியல் அரங்கில் அதிஉன்னத பதவி அவரைத்தேடி வந்தது. இவ்விஷயத்தில் அவருக்கு முன்மாதிரியாக இருந்து வந்த அவரது மூதாதையான மார்ல்பரோவின் புகழைக்கூட அவர் மங்கச் செய்து விட்டார். அவரது ஆலோசகர்களிலொருவர் கூறுவது போல, "இறுதியில் வின்ஸ்டன்தமது மூதாதையரைக்கூட மிஞ்சி விட்டார்."

அடுத்த திங்கட்கிழமை உணர்ச்சி யூட்டும், உள்ளக் கிளர்ச்சி ஏற்படுத்தும் பிரசங்கத்தை அவர் நிகழ்த்தினர். "இரத்தமும் கடும் உழைப்பும் வியர்வையும் கண்ணீரும்" தான் இங்கிலாந்தைக் காப்பாற்ற முடியும் என்பதை அவர் தெளிவு படுத்தினர். இவரது இப் பிரசித்திபெற்ற கலோகம் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு ஜனகாயகத்தின் ஜீவநாடியாகத் திகழ்ந்தது.

187047

யுத்த காலத்தில் சர்ச்சிலுடன் தொடர்புகொண்ட ஒவ்வொரு வரும் அவர் தூண்டிவிட்ட தைரியம் தம்மிடம் கொழுந்து விட்டு எரிவதை பிரத்தியக்ஷமாகக் கண்டனர். அவர் பதவி யேற்ற சிறிது காலத்துக்குப் பிறகு டன்கர்க் நிகழ்ச்சியின்போது அவரது தூண்டு தலே படை யெடுத்துச் சென்ற சேனையைக் காப்பாற்றியது. துரித மாக வெளியேறுவது அவசியம் என்பதை தெளிவுபடுத்தும் செய்தி 1940-ம் வருஷம் மே 29-ம் தேதி காலே 6-30 மணிக்குக் கிடைத்த போது, படுக்கையிலிருந்து துள்ளிக் குதித்து டெலிபோனைக் கையிலெடுத்துக் கொண்டார். அவசரத்தில் பொய்ப் பற்களைக்கூட பொருத்திக் கொள்ளாமல் டெலிபோனில அவர் பேச ஆரம்பித்து விட்டார். இயற்கையாகவே தெற்றிப் பேசும் இயல்புடைய அவர் பொய்ப் பற்களைப் பொருத்திக் கொள்ளவும் மறந்துவிட்ட காரணத் தால் அவரது குரல் தெளிவாகக் கேட்கவில்லை; எனினும், துரித மாக நடவடிக்கையில் ஈடுபடவேண்டுமென அவர் கட்டளை யிடுகிறுர் என்பது சந்தேகத்துக்கிடமின்றித் தெளிவாயிற்று. ரேடியோ மூலமா கவும் பத்திரிகை வாயிலாகவும் சர்ச்சில் சிறு கப்பல்கள் வேண்டு மென்கிறுர் என்ற தகவல் பரவியது. அவசரமாக ஒன்று சேர்க்கப் பட்ட சிறு மரக்கலக்கூட்டம் இங்கிலாந்து துறைமுகங்களிலிருந்து புறப்பட்டது. இங்கிலாந்தின் ராணுவ சரித்திரத்திலே வீரம் மிகுந்த செயல்களிலே இதுவும் ஒன்று. ஆனல், இந்த மீட்பு வேலையை வெற்றிச் செயல் எனக் குறிப்பிடாமல், இங்கிலாந்தின் நிலைமை அபாயகரமானது என்பதைத் தெளிவு படுத்தி, பெரும் தியாகங்கள் செய்வது அவசியம் என அவர் கூறினர்.

இந்த சமயத்தில் தமது பிரசித்திப்பெற்ற பிரசங்கத்தில் இணைக் தாற்போன்று அவர் கூறிய புறப் பேச்சு பற்றி சர்ச்சை இருந்து வருகி றது. ஆனல் ஸ்டுடியோவில் பிரசன்னமாகி யிருந்த பிரபல பிரிட்டிஷ் மதகுரு பின்வருமாறு கூறினர்: 'நாம் போரிடுவோம்' என்ற தோரணை யில் கம்பீரமான, உரத்த குரலில் பேசிவிட்டுப் பின்னர் சர்ச்சில், மைக்ரோபோன் மீது கைவைத்துக்கொண்டு பின்வருமாறு கூறினர்: 'மதுபான பாட்டில்களைக் கொண்டு அவர்களது மண்டைகளை நாம் உடைத்தெறிவோமாக; நம்மிடமுள்ள தளவாடமெல்லாம் மது பாட்டில்கள் தான்.'

ஐரோப்பா பணிந்து விட்டது. பாசிஸ்டுகளுடன் ரஷ்யா சேர்ந்து கொண்டது. அமெரிக்காவும் அசைக்க முடியாத நடு நாயக கொள்கையை அனுஷ்டிக்கப் போவதாக அறிவித்து விட்டது. இந்த இக்கட்டான நிலையில், தமது மந்திரி சபையைக் கூட்டினர். அதற்கு முன் அவரை அவ்வளவு உற்சாகத்துடன் அவரது சக மந்திரிகள் கண்டதில்லை. அவர் சொன்னர்: "கனவான்களே!

காம் தன்னந்தனியே நிற்கிறோம். என்னைப் பொறுத்த வரை, இந் நிலை மிகவும் களிப்பூட்டுவதாக நான் காண்கிறேன்.”

ராணுவத் தலைமைப் பொறுப்பை யார் ஏற்றுக் கொண்டு நிர்வகித்து வருகிறார் என்பது பற்றி எந்த சமயத்திலும் சர்ச்சிலின் சக மந்திரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டதில்லை. உயர்தர உத்தி யோகஸ்தர்களின் வீம்புப் பேச்சைக் குறைத்து கீழ் உத்தியோகஸ் தர்கள் சீக்கிரம் உத்தியோக உயர்வு பெருவதையும் அவர் தடுத்து வந்தார். தாம் செய்வது சரி யென்ற உணர்ச்சி கொண்ட மந்திரி யொருவருக்குக் கடுமையான வேலை அளிக்கப்பட்ட போது, அதனை ஆக்ஷேபித்து அம்மனிதர் சொன்னார்: “ஒரே சமயத்தில் இரண்டு காரியங்களை எனது வலது கரம் செய்ய முடியாது.” இவ்வார்த்தை களைச் செவியுற்றதும், சர்ச்சில் தமது வாய்க்குள் தமது வலது கட்டை விரலை நுழைத்து, எல்லா விரல்களையும் பலமாக அசைக்க ஆரம்பித்தார். மந்திரியை விளித்து அவர் சொன்னார்: “இப் போது, எனது வலது கரத்தைக் கவனித்துப் பாரும். எனது பற்களைச் சுரண்டுவதோடு எனது மூக்கையும் தேய்த்து விடுகிறது. இரு காரியங்களையும் அது ஏக காலத்தில் செய்கிறது.”

யுத்த காலத்தில் ஒரு சமயத்திலில்லா விட்டாலும் மற்றொரு சந்தர்ப்பத்தில், அனேகமாக அவரது சகமந்திரிகள் அனைவரும் அவரது சொற் தாக்குதலுக்கு இரையாயினர். ஒரு சமயம் மூர்க்க மாக அவர் பேசி, ஏசி விட்ட பிறகு, அவரது பிரதம மெய்காவல ரான தாம்ப்ஸன் ஜெனரல் இஸ்மேவிடம் சென்று புகார் செய்தார். எந்தத் தவரும் செய்யாதிருந்த போது தம்மை சர்ச்சில் கடிந்து கொண்டதாக அம்மனிதர் முறை யிட்டார். ஜெனரல் இஸ்மே யின் வருமாறு அவரைச் சமாதானப் படுத்தி அனுப்பினார். “எனக்கு கூட இதே போல கண்டனம் கிடைக்கிறது. கடும் பிரயாசையை இச்செயல் அவருக்கு (சர்ச்சிலுக்கு) அளிக்குமானால், அது பரவா யில்லை.”

யுத்த காலத்தில் பிரதமர் சர்ச்சிலின் பொழுது போக்குச் சாதனங்களில் சினிமாக்காட்சி பிரதான அம்சம் வகித்தது. டியன்னா டர்பின் படங்கள் இல்லாத சமயத்தில், கிளர்ச்சி யூட்டும் சரித்திர சினிமாப் படங்களை அவர் விரும்பினார். லாரல் ஹார்டியின் ஹாஸ்ய படங்களும் வால்ட் டிஸ்னேயின் கேலிச் சித்திர (‘கார்ட்டூன்’) படங்களும் அவருக்குப் பிடித்திருந்தன.

மற்றொரு பொழுது போக்கை அவரே ஏற்படுத்திக் கொண்டார். தமது அறையில் நீளவாட்டில் நடந்து செல்வதும், சக்கர நாற்காலி யில் நகர்ந்து செல்வதும் பின்னர் திரும்பி வருவதும் சங்கீத சுரத் தைக் கவனித்துக் களிப்பதும் தோள் மீது ஒரு தடியைச் சுமந்து

செல்வதும் தமக்கு அவர் அனுமதித்துக் கொண்ட பொழுது போக்கு முறைகள். இவ்வித விசித்திர விநோத செயலில் ஈடுபட்டிருக்கும் போது எவராவது திடீரென உள்ளே வந்து விட்டால் அவர் வெட்கப்படுவதில்லை. எதிர்பாராத விதமாக திடீரென உள்ளே பிரவேசித்து விடும் பிரபலஸ்தரைப் பார்த்துப் புன்னகை செய்து, விசித்திர பயிற்சி முடிவடையும் வரை அமர்ந்திருக்குமாறு அவர் சைகை காட்டுவார்.

சர்ச்சிலின் தமாஷ் பேச்சு தான் யுத்தத்தில் இங்கிலாந்துக்கு இதர நாடுகளைச் சிநேகம் செய்து கொடுத்தது. யுத்த காலத்தில் லண்டனிலே வெளி நாட்டு மன்னர்கள் குழுமி யிருந்தனர். தமது குதூகலப் பேச்சு, நடத்தை ஆகியவற்றின் மூலம் அவர்களை அவர் சிநேகம் செய்து கொண்டார். கைதேர்ந்த விற்பனையாளராக அவர் பணியாற்றினார் எனக்கூறலாம். உலகின் எந்தப் பகுதி ஏற்கத்தயாராக இருந்ததோ அதற்கெல்லாம் இங்கிலாந்தை விற்பனை செய்வதற்கு அவர் பின்னடையவில்லை. ஸ்டாலினுடனும் ரூஸ்வெல்டுடனும் அவர் நடத்திய மந்திராலோசனைகள் இதற்கு உன்னத உதாரணங்கள்.

தாம் சிந்திக்கும் பிரபலஸ்தர்களின் நல்ல அபிப்பிராயத்தையோ அல்லது கெட்ட அபிப்பிராயத்தையோ அவர் அசட்டை செய்து வந்தார். ஆனால் யுத்தகாலத்தில் பிளசெண்டியா குடாக்கடல் பிரதேசத்திலுள்ள பிரசித்திப்பெற்ற ஸ்தலத்தில் முதல் தடவையாக ரூஸ்வெல்டுக்கு அவர் அறிமுகமானது இதற்கு விதிவிலக்கு "பிரின்ஸ் ஆப்வெல்ஸ்" என்னும் போர்க் கப்பலில் செய்த கடற் பிரயாணத்தை அவர் ரசித்தார். சந்திப்புச்சமயம் நெருங்கியபோது அவரிடம் பதஷ்டநிலை, பரபரப்பு காணப்பட்டது.

1941-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 9ம் தேதியன்று "பிரின்ஸ் ஆப்வேல்ஸ்" பிளசெண்டா வளைகுடா போய்ச் சேர்ந்தது. "அகஸ்டா" என்னும் காவற்கப்பலை யணுகியதும் இந்த கப்பலைச் சுற்றி அமெரிக்க போர்க் கப்பல்கள் சூழ்ந்து நின்றன—சர்ச்சில் "பைனகுலர்" மூலம் பார்த்தபோது சுழலும் பீரங்கி பொருத்தப் பட்டிருந்த கப்பல் தளத்தின் உச்சியில் வெறுந்தலையுடன் ரூஸ் வெல்ட் நின்று கொண்டிருப்பதை அவர் கண்டார். சர்ச்சிலைப் போலவே அதே உணர்ச்சியுடன் பிரிட்டிஷ் பிரதமரை முதலில் சந்திக்கப்போகும் சமயத்தை ரூஸ்வெல்டும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். (தொடரும்.)

# திருக் குர்ஆன் : : : :
# : : : : சாரசங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

## சூதக காலத்தில் பெண்களைவிட்டு ஒதுங்குங்கள்

ஏ நபியே, தங்களிடத்தில் (பொதுஜனங்கள்) சூதகத் தொடக்கைப் பற்றி விசாரிக்கிறார்கள். "இது (தேகத்திலிருந்து வெளிப்படும்) ஒருவகை அசங்கியம்; சூதகப் பிரவாகமுள்ள (ஹைது) காலத்தில், பெண்களைவிட்டு (புருஷர்) ஒதுங்கி யிருக்க வேண்டும். அவர்கள் பரிசுத்த மடைந்து வராதவரைக்கும் (மண வறையில்) அவர்களிடத்தில் நெருங்காதீர்கள். எனவே, (ஹைது நின்று ஸ்நானம் செய்து) அவர்கள் பரிசுத்தமானதும் அவர்கள் அண்மையில் சென்று, இறைவன் உங்களுக்கு கட்டளையிட்ட பிரகாரம் (மணவாழ்க்கையில்) பிரவேசியுங்கள். என்று நபியே, அந்த ஜனங்களுக்குச் சொல்லிவிடுவீராக. மேலும் ஞாபகம் வையுங்கள். (தவ்பா செய்து) பாப மன்னிப்புக் கோருபவர்களை இறைவன் மிகவும் நேசிக்கின்றான். (சரீர சுத்தியாகி) தூய்மையாய் இருப்பவர்களையும் இறைவன் அதிகம் நேசிக்கின்றான் (ஸூரா: அல்பகரா; ருகூ: 28)

## மனைவியுடன் பிணங்கிப் பிரமாணம் செய்வோரின் செயல்

அந்தச் சில ஜனங்கள் (பாமரர்கள்), தங்கள் மனைவியருடன் (பிணங்கிக்கொண்டு) 'இனி சம்போகம் செய்யமாட்டேன்' என்று (சத்தியப்)பிரமாணம் செய்து விடுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நான்கு மாத தவணை உண்டு. அதற்குள், அந்தத் தம்பதியர்கள் (பிணக்கம் நீங்கி) வீடு கூடிக்கொள்ளலாம்; அப்படிப்பட்டவர்கள் மீது இறைவன் (மன்னித்து) கிருபை புரிபவனாக இருக்கின்றான். அங்ஙனமின்றி 'தலாக்' சொல்லி (விலக்கி)யே தீருவதென்று திடமான எண்ணத்துட னிருப்பார்களாயின், இதனையும் அல்லாஹு (தஆலா) கேட்டுக்கொண்டும் பார்த்துக்கொண்டும் தானிருக்கிறான். (ஸூரா: அல்பகரா; ருகூ: 28)

## விதவையானவளை மணந்து கொள்வது பற்றிய நற்செய்தி.

(ஜனங்களே!) விதவையாய்விட்ட பெண்களைப்பற்றி ஜாடைமாடையாய் நீங்கள் விவாகம் செய்து கொள்வதற்கு செய்தி அறிவிக்

கின்றீர்களா? அல்லது அவர்களை வியக்தமாகவே உங்கள் திருமண வாழ்வில் (நிக்காஹ்வில்) கொண்டுவந்துவிட எண்ணம் கொண்டிருக்கிறீர்களா? (சரி,) இப்படிச் செய்துகொள்வதில் பாபம் ஏதும் இல்லை; (நன்மையே யாகும்). அந்த (விதவை)ப் பெண்களை மணந்து கொள்ளும் விஷயமாய் நீங்கள் (மனதில்) என்ன எண்ணுகிறீர்கள் என்பதையும் இறைவன் நன்கு அறிந்தே இருக்கின்றான். ஆகையால் அப்பெண்டிரை மணந்து கொள்ளும் காரியத்தை (நிக்காஹ்வை) நீங்கள் மறைத்து ஒளித்து (இரகசியமாய்) செய்யாதீர்கள்; எதை நீங்கள் செய்ய நாடுகின்றீர்களோ அதை ஜாயிஸான முறையில் செய்து கொள்வீர்களாக. (கணவனை இழந்த) அந்தப்பெண், தன் குறிப்பிட்ட 'இத்தா' காலத்தை தீர்க்கமாய் கழித்து முடிக்காத முன்னர், அவளைத் திருமணம் புரிந்துகொள்ள (அவசரப்பட்டு) விழையாதீர்கள். மேலும் இதை நன்றாய் ஞாபகத்தில் இறுத்திக்கொள்ளுங்கள். அல்லாஹுத ஆலா உங்கள் பிழைகளை மன்னிப்பவனாகவும், பெருந் தன்மையானவனாகவும் இருக்கின்றான். (ஸூரா: அல்பகரா; ருகூ:30)

## உங்கள் விதவைகட்கு ஓராண்டுவரை ஜீவனும்சம் கொடுங்கள்.

உங்களில் யாரேனுமோர் ஆடவர், ஸ்திரியை விதவையாகச் செய்து விட்டுச் செல்வாராயின், அன்னவர், விதவை ஸ்திரிக்கு (தன் சொத்திலிருந்து) ஓராண்டுவரை(யாவது) ஜீவனும்சம் கொடுத்து வருமாறு, (தம் சுற்றத்தாருக்கு) வஸிய்யத்து (கட்டளை) செய்வாராக. (ஆதரவிழந்த) அந்த ஸ்திரியை ஒருக்காலும் வீட்டை விட்டு வெளியேற்றாதீர்கள். ஆயினும் அவ்விதவை மாது, தான் சுயமே (மரித்த கணவனின்) வீட்டை விட்டு வெளிப்பட்டுப் போய் விடுவாளாயின், மையித்துக்குரிய வாரிஸானவர் (உற்றார் உறவினர்) மீது எத்தகைய பாபமும் இல்லை. எனவே அன்னவள், தன்பொறுப்பில் (ஊர்) வழக்கப் பழக்கம் போல் தனக்குரிய வழியை தீர்மானித்துக் கொள்வாளாக. (இத்தகைய விஷயங்களைப் போதிப்பதில்) அல்லாஹுதஆலா, மகத்தான விவேகமுடையவனாக இருக்கின்றான். (ஸூரா: அல்பகரா; ருகூ: 31.)

## உலோபித்தனம் செய்வோருக்குள்ள தீய பலன்.

இறைவன், தன் கிருபையாலும் அருளாலும் கொடுத்துள்ள பாக்கியச் செல்வங்களி லிருந்து சக்தியானுசாரம் (ஏழை எளியோருக்கு) செலவு செய்வதில், செல்வந்தர்கள் உலோபித்தனம் செய்ய வேண்டாம், அங்ஙனம் அன்னோர் உலோபித்தனம் செய்துவிட்டு, அச்செயல் அவர்களுக்கு நன்மை (பரக்கத்) ஆகுமென்று எண்

ணிக்கொண்டிருக்க வேண்டாம். இது அவர்களுக்கு மிகவும் தீங்கானதேயாகும். அவர்கள் (செலவு செய்யாமல் உலோபித்தனமாய்) சேமித்து வைத்துச்சென்றுர்களே அவைகளே, கியாமத்தில் (இறைவன் தீ) வடமாகச் செய்து கழுத்திலே மாட்டிவைப்பான். ஏ ஜனங்களே, நன்ருய் இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்: பூமியுடையவும் வானமுடையவும் அனந்தர உரிமை யெல்லாம் அல்லாஹ்வுக்கு உரியனவே யாகும்; அவன் உங்கள் செயல்களையெல்லாம் நன்கறிந்தே இருக்கின்ருன். (ஸூரா: ஆலஇம்ரான்; ருகூ: 18.)

## துஷ்கிருத்தியம் செய்வோரை நன்ருய் அடியுங்கள்.

உங்களில் எவரேனும் இரு ஆண்கள் சேர்ந்து துஷ்கிருத்தியம் (தகாத் புணர்ச்சி) செய்வார்களாயின் அவ்விருபேரையும் நன்ருய் அடி(த்து புத்தி கற்பி)யுங்கள். அங்ஙனம் அவர்கள் (பச்சாத்தாபப் பட்டு) தவ்பா செய்து கொண்டு நல்வழியில் வந்து விடுவார்களாயின், அவர்களைப்பற்றி கவலையை விட்டுவிடுங்கள். நிச்சயமாக அல்லாஹு தஆலா, தவ்பா செய்பவர்கள் மீது மகா கிருபையாளனுக இருக்கின்ருன். (ஸூரா: அன்னிஸா; ருகூ: 3)


## இரத்தின விலாசம் நஸீஹத்துலாசம்.

அல்லாஹ், றஸூலைக் கொண்டு ஈமான் கொண்ட ஒவ்வொரு முஸ்லிமும் படித்தறிந்து அமல் செய்ய வேண்டிய அருமையான நூல் இது. பிரபல இஸ்லாமிய அரபு கிரந்தங்களாகிய கஜானத்துல் அஸ்ரார், ஷிர்ஹத்துல் இஸ்லாம், ரத்துல் முக்தார், துர்ரத்துன் நாஸிஹின் முதலிய கிதாபுகளிலிருந்து திரட்டி யெடுத்தெழுதப்பட்ட அருமையான நஸீஹத்துகளும், மஸ்அலாக்களும், ஹதீதுகளும், ஹிக்காயத்துகளும் நிறைந்த நூல் இது. ஒவ்வொருத்தருடைய கையிலும் இருந்துதீரவேண்டிய புத்தகம். தமிழ் முஸ்லிம்களுக்கு இன்றியமையாத நூல். இதன் அருமை நேரில் பார்த்தால் தெரியவரும். சுத்தத் தமிழ் விலை ரூ. 1—8—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# அரும் பெரியீர்! ஆவி நீத்தனையோ?

[வேளாங்கண்ணி - கவிஞர் சாந்திதாசன்]

(1) மறை நான்கு நிறைப்போதம் பொருள் தொடுத்து
நரர் நாவின் இனிமைக்கோர் நலன் குவித்து
அறநாதர் நபி எங்கோன் அருள் நிழலிற்
பறைசாற்றி அரவணைக்கும் அரும்பெரியீர் மறைந்தனையோ?

(2) உடல் நிலையும், தன்நலமும் உதறித்தள்ளி
கடும்பணியாய் எந்நாட்டின் எல்லையினும்
திடம் ததும்ப திகைப்பூட்டும் சொற்பொழிவால்
அடைந்துள்ள வெற்றி வேந்தே அந்தோ மறைந்தனையோ?

(3) "மீரத்து மௌலானா" என்னும் மகா
சீர் நாமத்தின்பாலே சிறந்தியங்கி
பாரெங்கும் ஓர்குடையாளன் புகழை
ஆரவாரித்த அன்புருவே மறைந்தனையோ?

(4) அல்லாமா அப்துல் ஹலீம் சித்தீக்கி என்பதிலாய்
எல்லோரின் இதயத்தும் என்றென்றும் இடமாகி
நிலைக்களனாய் நின்று விட்டு நீர்க்குழுமியினை வெறுத்து
கலைமணியே! கற்பகமே! ககனத்தே மறைந்தனையோ?

(5) தேடுகிறோம், தேடுகிறோம் வாடிய வதனமதாய்
ஈடில்லா சன்மார்க்க இன்வழியை நன்னயமாய்
கூடிய அறிஞரிடை கொட்டிக்குவிக்கும் நீவீர்
நாடும் எங்கள் துயரம் நினையாது மறைந்தனையோ?

(6) அமலன்தான் அயர்வுநீங்க இமைநேரம் அழைத்தானோ
சமயவெறியர் எதிரில் நும் சகவாசம் வெறுத்தானோ
[illegible]ன்ற சுவனப்பதியில் கட்டித்தழுவிக் கொண்டானோ
[illegible] மேதையே! எங்குதான் மறைந்தனையோ?

18702

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

# மிப்தாஹுல்ஃஸலாஹ் பீ

# யீலாஹின் னிகாஹ்.

(இப்புத்தகம் இல்லறவாசிகள் ஒவ்வொருவருக்கும் அவசியம் வேண்டியது)

இதில் நிக்காஹுடைய வரிசைகளும், அஹ்காம்களும் ஸ்திரீ புருஷருடைய குணலக்ஷணங்களும், ஒவ்வொரு வரும் இன்ன குணமுடையவர்களென்று பார்த்த மாத்திரத் தில் கண்டறியக்கூடிய வழியும், ஸ்திரீ புருஷர்கள் அவசியம் அறிய வேண்டிய அநேக ரகசியங்களும், ஒரு புருஷன் விரும்பிய மனைவியையும், ஒரு ஸ்திரீ விரும்பிய கணவனை யும் அடைவதற்கு வேண்டிய இஸ்முகளும் அடங்கி இருக் கின்றன.

இவை யன்றி ஸ்திரீ புருஷருக் கிடையில் முஹப்பத் உண்டாவதற்கும், ஹமல் உண்டாவதற்கும், ஹமலைக் காப்ப தற்கும் அவசியமான இஸ்முகளும், ஹமலில் உண்டாகக் கூடிய பலவகை வியாதிகளுக்கு அரிய ஔஷதங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

—

முன்பதிப்பிலிருந்ததைவிட இப்பதிப்பில் அநேக அரிய விஷயங்களும், இஸ்முகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வாசிப்போர்க்கே இந்நூலின் அருமை விளங்கும். புதிய பதிப்பு கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு விலை ரூ. 3

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# பத்ஹுர் ரஹ்மான் பில்பிக்ஹின் ஹுஃமான்.

(ஹனபி மதுஹபுக்குரியது)

பிரயோஜனமான கல்வி, பிரயோஜன மில்லாத கல்வி என்று இரண்டு வகை யுண்டு. உலக வாழ்வை மட்டும் நமக்கு எடுத்துச் சொல்வது பிரயோஜன மில்லாத கல்வி. நம் மனமும் ஒழுக்கமும் சீர்பெற்று மறுமையில் நமக்கு ஈடேற்றம் தரக்கூடியதே பிரயோஜனமான கல்வி யாகும்.

தீனுல் இஸ்லாத்தின் தத்துவங்களையும், அனுஷ்டான ஒழுக்கமுறைகள் என்னும் பிக்ஹு மஸ்அலாக்களையுங் கற்றறிந்து அமல் செய்ய வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடையவும் கடமை யாகும். இதுதான் இம்மை, மறுமை இரு லோகத்தில் பிரயோஜனம் தரவல்லது.

இந்த நூலில் ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து ஒழுக வேண்டிய எல்லா விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. உதாரணமாக ஈமான், இஸ்லாம், கலிமா, பரிசுத்தம், தொழுகை, ஜும்ஆ மகிமை, ஜியாரத்துல் குபூர், ஜக்காத், நோன்பு, ஹஜ்ஜு முதலிய மஸ்அலாக்களும், இஸ்லாமிய ஒழுக்கமும், ஸுன்னத்தின் சிறப்பு, ஸபருடைய ஒழுக்கம் இபாதத்தின் மகிமை மற்றும் சகல விதமான போதனைகளும் அடங்கி யிருக்கின்றன.

நல்ல சுத்த தமிழில் இனிய நடையில் எழுதப்பட்ட புதிய நூல்—புதிய பதிப்பு. ஆங்கு அரபு மொழியில் ஓத வேண்டிய கலிமா, துஆ முதலானவைகள் அறபிலேயும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருமை நேரில் பார்த்தால் தான் தெரியும்.

இதன் விலை ரூ. 3

ஷெ அறபுத் தமிழ் அல்பத்ஹுர் றப்பானீ-பி-பிக்ஹே நிஃமானி

விலை ரூ. 5

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.